இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 198 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 16 – புதன்கிழமை 28 பிப்ரவரி 2024 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 198: Thiruvalluvar Year - 2055 - Maasi 16 - Wednesday 28 February 2024 - Dak 16 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (26.2.2024) சென்னை, மெரினா கடற்கரையில், பேரறிஞர் அண்ணா அவர்களின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடம் மற்றும் புதிதாக அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத் திறப்பு நிகழ்ச்சியில், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சிலைகளைத் திறந்து வைத்தார்.

## புதுப்பிக்கப்பட்டுள்ள ‘அண்ணா நினைவிடம்’

# புதிதாகக் கட்டமைக்கப்பட்டுள்ள ‘கலைஞர் நினைவிடம்’

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை,பிப்.28–**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.2.2024) சென்னை, மெரினா கடற்கரையில், தமிழ்ச் சமுதாயத்தின் தன்னிகரில்லாத் தலைவர்களாகத் திகழும் பேரறிஞர் அண்ணா அவர்களின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடத்தையும், புதிதாக அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தையும் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.**

**அதனைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவச் சிலைகளைத் திறந்து வைத்து, பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.**

**இம்மாபெரும் நிகழ்வு பற்றிய விவரம் வருமாறு:–**

உலகத் தமிழினத்தின் மிக உயர்ந்தத் தலைவராக திகழ்ந்த **பேரறிஞர் அண்ணா** அவர்கள் 1969–பிப்ரவரி 3ஆம் நாள் மறைந்த பின் அவருக்குச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் எதிரில் மிகச் சிறந்த கட்டடக்கலை வடிவமைப்புடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் நினைவிடம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்நாட்டு முதலமைச்சராக 19 ஆண்டு காலம் நல்லாட்சி புரிந்து, தமிழ்நாட்டை வளப்படுத்தி, தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, நவீன தமிழ்நாட்டின் சிற்பியாக விளங்கி, உலக வரலாற்றில் உன்னதப் புகழ்ச் சின்னமாகத் திகழும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமது 95ஆம் வயதில் 2018 ஆகஸ்டு திங்கள் 7ஆம் நாள் மறைந்து, பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடம் அருகிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம்! முதலமைச்சர் அறிவிப்பு!

முதலமைச்சர் அவர்கள் 24.8.2021 அன்று சட்டமன்றப் பேரவை விதி 110ன்கீழ் வெளியிட்ட அறிவிப்பில்,

> **“உலகெங்கிலும் தமிழர்களுக்கெல்லாம் தமிழினத் தலைவர், இலக்கியத் துறையைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் முத்தமிழறிஞர், கலையுலகத்தினருக்கு என்றும் கலைஞர், தமிழ்நாட்டின் தலைவர்களுக்கெல்லாம் தலைவர், இந்திய அரசியலை வழிநடத்திய அரசியல் ஞானி, ”என் பாதை, சுயமரியாதைப் பாதை தமிழின நலன் காக்கும் பாதை தமிழ் நெறி காக்கும் பாதை தந்தை பெரியாரின் பாதை பேரறிஞர் அண்ணாவின் பாதை அறவழிப் பாதை அமைதிப் பாதை ஜனநாயகப் பாதை இதில் பயணித்தால் மரணமே வரும் எனப் பய முறுத்தினாலும், அந்தப் பாதையிலிருந்து மாற மாட்டேன்”**

என்று இறுதிவரை உறுதியோடு வாழ்ந்தவர்தான் கலைஞர் அவர்கள்.

### வாழ்ந்த காலமெல்லாம் வரலாறாக வாழ்ந்தவர்!

எண்பது ஆண்டு பொதுவாழ்க்கை, எழுபது ஆண்டுகள் திரைத்துறை, எழுபது ஆண்டுகள் பத்திரிகையாளர், 60 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினர், 50 ஆண்டுகள் ‘திராவிட முன்னேற்றக் கழகம்’ என்ற மாபெரும் பேரியக்கத்தினுடைய தலைவர் என்று வாழ்ந்த காலம் முழுவதும் வரலாறாக வாழ்ந்தவர் கலைஞர் அவர்கள்.

நின்ற தேர்தலில் எல்லாம் வென்றவர், இந்தியாவில் இப்படி ஒருவர் இருந்தது கிடையாது; இனி ஒருவர் அவர் இடத்தை அரசியல் களத்தில் பிடிக்கவும் முடியாது என்ற போற்றத்தக்கப் பெருமைக்குரியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

**தாய்த் தமிழ்நாட்டை உருவாக்கிய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய அரும்பணிகளைப் போற்றும் விதமாக, அவரது வாழ்வின் சாதனைகளை, சிந்தனைகளை மக்களும், வருங்காலத் தலைமுறையும் அறியக்கூடிய வகையில், நவீன விளக்கப் படங்களுடன் அண்ணா நினைவிடவளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.**




முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.2.2024) சென்னை, மெரினா கடற்கரையில், தமிழ்ச் சமுதாயத்தின் தன்னிகரில்லா தலைவர்களாகத் திகழும் பேரறிஞர் அண்ணா அவர்களின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடத்தையும், புதிதாக அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தையும் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், சட்டமன்றப் பேரவை தலைவர் மு.அப்பாவு, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி., இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் கே.எம்.காதர் மொகிதீன், பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்ற கட்சித் தலைவர் ஜி.கே.மணி, மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், கவிப்பேரரசு வைரமுத்து, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அண்ணா – கலைஞர் நினைவிடங்களின் சிறப்பம்சங்கள்!

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய இருபெரும் தலைவர்களின் இரண்டு நினைவிடங்களும் 8.57 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னைக் கடற்கரை – காமராசர் சாலையில் அமைந்துள்ள இந்த நினைவிடங்களின் முகப்பு வாயிலில் ‘பேரறிஞர் அண்ணா நினைவிடம் – முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம்’ எனும் பெயர்கள் அழகுறப் பொறிக்கப்பட்டுள்ளன. நுழைவு வாயிலை கடந்து உள்ளே செல்லும் வழியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் படிப்பது போன்ற சிலையும், வலதுபுறம் இளங்கோ வடிகள் சிலையும், இடதுபுறம் கம்பர் சிலையும், நினைவிடங்களின் முன்பகுதி இரு புறங்களிலும் பழமையான புல் வெளிகளும், இடப்புறத்தில் அண்ணா அருங்காட்சியகமும் அமைந்துள்ளன.

**“எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது”.** எனப் பொறிக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா அவர்கள் துயில்கொள்ளும் சதுக்கத்தைக் கடந்து சென்றவுடன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அமர்ந்து எழுதும் வடிவிலான சிலையும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சதுக்கமும் அமைந்துள்ளன.

இச்சதுக்கத்தில், **“ஓய்வெடுக்காமல் உழைத்தவர், இங்கே ஓய்வு கொண்டிருக்கிறார்”** எனும் வாசகம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எண்ணப்படியே பொறிக்கப்பட்டுள்ளது.

கலைஞர் சதுக்கத்தின் முன்னே இருபுறமும், காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்கள், தமிழ்ச் செம்மொழி என ஒன்றிய அரசு ஏற்ற முடிவைத் தெரிவித்துப் பாராட்டி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு எழுதிய கடிதம் ஆங்கிலத்திலும், தமிழிலும் புத்தக வடிவில் அமைக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

**முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத் திறப்பு நிகழ்வில் முதல்வர் மு.க.ஸ்டாலினின் காணொலி உரை!**

2 ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 28-02-2024

# சதிகளை வெல்லும் சாதுர்யங்கள் - 1

சில நாட்களுக்கு முன்னால் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் 'தினமலர்' நாளிதழுக்கு ஒரு பேட்டி கொடுத்திருந்தார். வேறு யாருக்கு கொடுப்பார்? அந்த நாளிதழ் அதற்கு இட்டிருந்த தலைப்பு, **'சாதுர்யம் இருந்தால் தமிழகம் சாதித்து கொள்ளலாமே!'** என்பது ஆகும்.

**'தமிழ்நாட்டில் இருந்து வரி வாங்காமல் ஒன்றிய பா.ஜ.க. அரசும் சாதுர்யம் இருந்தால் சாதித்துக் கொள்ளலாமே'** என்று நமக்கும் கேட்கத் தெரியும்.

சுயமாய் நிதி உருவாக்கத் தெரியாததால் மாநிலங்களின் நிதியை ஜி.எஸ்.டி.யாகச் சுரண்டிக் கொழுக்கும் ஒன்றிய அரசின் நிதித் துறை அமைச்சராக இருப்பவரால், மாநில வரிகள் இல்லாமல் அரசை நடத்த முடியுமா? நடத்தத் தெரியுமா? பூண்டு சாப்பிடாத புத்திசாலியால், வெங்காயம் சாப்பிடாத அறிவாளியால் இது முடியுமா?

நிதி அமைச்சகப் பணியே நிதிப் பகிர்வுதான். இந்த அடிப்படையே தெரியாதவர் ஒன்றிய நிதி அமைச்சராக இருக்கிறார். அண்ணாமலைகள், ஆர்.என்.ரவிகள், நிர்மலா சீதாராமன்கள் போதாதா பா.ஜ.க.வின் ஒன்றரை அணா வாக்கு வங்கியை ஒழிக்க! அதற்குத்தான் உதவும் இந்தப் பேட்டிகள்!

தேர்தல் என்பதால் இவர்களை பேச வைக்கிறார்கள். தேர்தல் நேரத்தில் இவர்களை பேச வைக்காமல் இருப்பதுதான் அந்தக் கட்சிக்கு நல்லது என்ற அடிப்படையில் இருக்கிறது அந்தப் பேட்டி.

தூத்துக்குடி நிகழ்ச்சியில் இந்தப் பேட்டிக்கு மிகச் சரியான பதிலடி கொடுத்துள்ளார் முதலமைச்சர் அவர்கள். **"உங்களிடம் சாதுர்யம் இருந்தால் நீங்கள் சாதித்துக் கொள்ளலாமே என்று மிக ஆணவமாக அவர் பேட்டி அளித்துள்ளார். இது அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல. எங்களிடம் சாதுர்யம் இருப்பதால் தான் இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை ஆக்கிக் காட்டி இருக்கிறோம்.தொழில் தொடங்குவதற்கு தமிழ்நாட்டை நோக்கி உலகப் புகழ் பெற்ற நிறுவனங்கள் வர என்ன காரணம்? எங்களது வளர்ச்சியைப் பார்த்துதானே வருகிறார்கள். அனைத்துத் துறையிலும் முதலிடத்தை நோக்கி முன்னேறிக் கொண்டு இருக்கிறது தமிழ்நாடு. இவரைப் போன்ற இடைக்காலத் தடைகளையும் தாண்டித்தான் இந்த வெற்றியை பெற்று வருகிறோம்."** என்று சொல்லி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

சட்டமன்றத்தில் உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசின் சாதனைகளை முழுமையாகப் பட்டியலிட்டாரே! இவை அனைத்தும் பா.ஜ.க.வின் சதிகளை வென்ற சாதுர்யங்கள் தானே!

* இந்தியாவின் பொருளாதாரத்துக்கு 9 விழுக்காடு பங்கைத் தருவது தமிழ்நாட்டின் பொருளாதார வளமாக இருக்கிறது.

* இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அளவில் இந்தியாவில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது.

* ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சி 7.24 விழுக்காடாக இருக்கும் போது - தமிழ்நாட்டின் வளர்ச்சியானது 8.19 விழுக்காடாக இருக்கிறது.

* இந்திய அளவில் பணவீக்கமானது 6.65 விழுக்காடாக இருக்கும் போது - தமிழ்நாட்டில் அது 5.97 விழுக்காடாக இருக்கிறது. தேசிய சராசரியை விட தமிழ்நாட்டின் பணவீக்கம் கட்டுக்குள் இருக்கிறது.

* ஏற்றுமதி தயார் நிலைக் குறியீட்டில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது.

* தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக 14 ஆவது இடத்தில் இருந்து 3 ஆவது இடத்துக்கு தமிழ்நாடு உயர்ந்து வந்துவிட்டது.

* கல்வியில் இரண்டாவது இடத்துக்கு தமிழ்நாடு வந்துவிட்டது.

* புத்தாக்கத் தொழில்கள் வரிசையில் தமிழ்நாடு முதலிடத்துக்கு வந்துவிட்டது. - இவை அனைத்தும் தமிழ்நாடு அரசின் சாதுர்யத்தால் அடைந்த சாதனைகள்தான். பா.ஜ.க. அரசின் சதிகளை வென்று அடைந்த சாதுர்ய சாதனைகள்தான்.

நிதிப்பற்றாக்குறை என்பது 3.5 விழுக்காட்டுக்குள் இருக்க வேண்டும். அந்த வரம்புக்குள்தான் தமிழ்நாடு அரசு இருக்கிறது. உள் கட்டமைப்புக்காக ஒரு மாநில அரசு எவ்வளவு செலவு செய்கிறது என்பது அந்த மாநிலத்தின் வளத்தைக் காட்டும். அந்த வகையில் கட்டமைப்புக்காக 47 ஆயிரம் கோடியைச் செலவு செய்யும் அளவுக்கு நிதி வளம் தமிழ்நாடு அரசுக்கு இருக்கிறது.

அதேபோல் மாநிலத்தின் வரி வருவாய் எப்படி இருக்கிறது என்பதும் அந்த மாநிலத்தின் நிதி வளத்தின் அடையாளம் ஆகும். நிதித் துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் அவர்கள் அளித்துள்ள பேட்டியில் இதனை விளக்கிச் சொல்லி இருக்கிறார்.

**"நம்முடைய சொந்த வரி வருவாயில் 15 விழுக்காடு வளர்ச்சியை எதிர் பார்க்கிறோம். பத்திரப் பதிவுத் துறையில் அதிக வளர்ச்சி இருக்கும். மற்ற வரி வருவாயில் அதிகளவு நிதி வரும் என எதிர்பார்க்கிறோம். வணிக வரி, பத்திரப் பதிவுத் துறையில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அவை வரும் நிதி ஆண்டில் நல்ல பலனைத் தரும்" என்று சொல்லி இருக்கிறார்.**

ஒன்றிய அரசின் நிதிப் பகிர்வானது 6.66 விழுக்காடாக இருந்து இப்போது 4.08 ஆக குறைந்து விட்டது. அதற்கு நிர்மலா சீதாராமன் பதில் சொல்ல வேண்டும்.

இரண்டு பெரும் வெள்ளம் காரணமாக நாம் கேட்ட 37 ஆயிரம் கோடியில் ஒரு பைசா கூட வரவில்லை. அதற்கு அமைச்சர் நிர்மலா சீதாராமன் பதில் சொல்லி இருந்தால் பாராட்டலாம்.

ஒன்றிய அரசிடம் இருந்து வரவேண்டிய மானியங்கள், நாளுக்கு நாள் குறைந்து கொண்டே இருக்கின்றன. அதற்கு அவர் நியாயமான காரணங்கள் சொல்லி இருக்க வேண்டும்.

**- தொடரும் -**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (26.2.2024) சென்னை, மெரினா கடற்கரையில், தமிழ்ச் சமுதாயத்தின் தன்னிகரில்லா தலைவர்களாக திகழும் பேரறிஞர் அண்ணா அவர்களின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடத்தையும், புதிதாக அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தையும் திறந்து வைத்து, நினைவிடத்தில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் உலகம் அரங்கத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், சட்டமன்றப் பேரவை தலைவர் மு.அப்பாவு, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி., இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் கே.எம்.காதர் மொகிதீன், பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்ற கட்சித் தலைவர் ஜி.கே.மணி, மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், கவிப்பேரரசு வைரமுத்து, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கலைஞர் என்றாலே போராட்டம்தான்!

# கலைஞரின் இறுதிப் போராட்டத்தின் அடையாளம்தான் இந்த நினைவிடம்!

## காணொலி உரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கம்!

**சென்னை, பிப். 28 -**

**"கலைஞர் என்றாலே போராட்டம்தான்! அவரது இறுதிப் போராட்டத்தின் அடையாளம் தான் இந்த நினைவிடம்!" என்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத் திறப்பு நிகழ்ச்சியில் ஒளிபரப்பப்பட்ட, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் காணொலி உரையில், முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.**

முதல்வர் அவர்களின் காணொலி உரை வருமாறு: -

"இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா..
நான் வரும்போது கையோடு கொணர்ந்து அதை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா?"

- பேரறிஞர் அண்ணா மறைந்தபோது தலைவர் கலைஞர் எழுதிய கவிதை உயில் இது!

**உயிரனைய அண்ணனுக்குப் பக்கத்தில்...!**

அந்தக் கலைஞருக்கு வங்கக் கடலோரம் வாஞ்சைமிகு தென்றலின் தாலாட்டில் அவரது உயிரனைய அண்ணனுக்குப் பக்கத்தில் நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணாவின் நினைவிடம் மறு உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடம் புது உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்த அண்ணனும் தம்பியும்தானே தமிழ்நாட்டுக் குடும்பங்களின் தலைப்பிள்ளைகள்! இன்று நாம் பார்க்கும் தமிழ்நாட்டை உருவாக்கியவர்கள்!

**கண்ணைக் கவரும் கம்பீர நினைவிடம்!**

நம்மையெல்லாம் இன்றும் என்றும் இயக்கும் தலைவர் கலைஞர் அவர்களுக்கு...

இதோ உங்களுக்கு சென்னைக் கடலின் கரையில் கண்ணைக் கவரும் கம்பீர நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது!

பதினான்கு வயதில் தமிழ்க் கொடி ஏந்தி அதை 95 வயது வரையில் விடாமல் பிடித்திருந்த கனத்த கரங்களுக்குச் சொந்தக்காரரான தலைவர் கலைஞரின் முழு வாழ்க்கையையும், இந்த நினைவிடத்தைச் சுற்றிப் பார்க்கும்போது மொத்தமாய் தெரிந்து கொள்ளலாம்!

தனது வாழ்க்கை வரலாற்றை "நெஞ்சுக்கு நீதி" என்று ஆறு பாகங்கள் மட்டும் எழுதினார் கலைஞர். "இயற்கை இடமளித்தால் ஏழாவது பாகத்தையும் எழுதுவேன்" என்று ஊக்கமாகவும் இருந்தார். காலம் அவரை நம்மிடம் இருந்து பிரித்துச் சென்றது.

**கலைஞரின் வாழ்க்கை அனைத்தையும் காட்சிக்குக் கொணரும் கண்காட்சி!**

வரலாற்றைப் படைக்கும் வல்லமையை அவர் நமக்கு வழங்கிச் சென்றதால் அடுத்தடுத்த பாகங்களில் கலைஞர் இருந்து எழுதி இருந்தால் என்னவெல்லாம் எழுதி இருப்பாரோ, அவை அனைத்தையும் காட்சிக்குக் கொண்டு வந்து நிறுத்தும் வகையில் கண்காட்சியாக வைத்துள்ளோம்!

திருவாரூரில் இருந்து கண்களில் கனவுகளோடும் -

நெஞ்சில் ஈரத்தோடும் -

சிந்தனையில் தெளிவோடும் -

கால்களில் உறுதியோடும் கிளம்பிய மு.கருணாநிதி என்ற இளைஞன்தான் -

தன் கையில் அதிகாரம் கிடைத்ததும்

தனது கனவுகள் அனைத்தையும் தமிழ் நிலத்தில் விதைத்து, **நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பியாக** மாறினார்.

தன் கையில் இருந்த செம்மொழி எழுதுகோலைச் செங்கோலாக மாற்றி அவர் உருவாக்கிக் கொடுத்த திட்டங்கள்தான்,

இன்று தமிழ்நாட்டின் நான்கு திசைகளிலும் எட்டுக் கோணத்திலும் எதிரில் தென்படுவது அத்தனையுமாகும்!

### அமைச்சர் எ.வ.வேலுவின் அர்ப்பணிப்பு உணர்வால் உருவான 'கலைஞரின் உலகம்'!



"பொதுப்பணித் துறை அமைச்சரும், 'எதிலும் வல்லவர்' என்று தலைவரால் போற்றப்பட்டவருமான எ.வ.வேலு அவர்களின் அர்ப்பணிப்பு உணர்வால் மிகச்சீரிய முறையில் கட்டி எழுப்பப்பட்டுள்ளது 'கலைஞரின் உலகம்!'

'கலைஞரின் உலகம்' என்ற இந்த நினைவிடம், இந்தியாவின் இரண்டாவது பெரிய கடற்கரையில் இருக்கும் முதல் அதிசயம்!

கலைஞர் எனும் உலகத்தால் நாம் சுற்றுகிறோம்... தமிழ்நாடு சுற்றுகிறது... கலைஞர் உலகு ஆள்வார்! உலகம் கலைஞர் பெயரை உச்சரித்துக் கொண்டே இருக்கும்."

**முதலமைச்சர்களுக்கு முத்தமிழறிஞர் பெற்றுத் தந்த உரிமை!**

மக்கள் போராடிப் பெற்ற விடுதலை நாளன்று கொடியேற்றும் உரிமை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத்து முதலமைச்சர்களுக்குத் தான் உண்டு என்ற உரிமையை,

இந்தியாவின் அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் பெற்றுத் தந்த அகில இந்தியத் தலைவர் அவர்!

கோபாலபுரத்தில் இருந்து அவர் கோலோச்சிய தமிழ் அரசவைக்கு வந்து செல்லாத அகில இந்தியத் தலைவர்களே இல்லை!

கலைஞர் - கலையானவர்! அரசியலுமானவர்!

இரண்டாலும் இயங்கியவர்! இரண்டு உலகங்களையும் இயக்கியவர்!

அவரது பேனா தீட்டிய கதைகள் - கவிதைகள் - புதினங்கள் - நாடகங்கள் - திரைக்கதை உரையாடல்கள் என்பவை எல்லாம் தமிழ் இருக்கும் காலமெல்லாம் இருக்கும் அழியாத காவியங்கள்! எந்த ஆழிப்பேரலையாலும் அழிக்க முடியாதவை!

ஐந்து முறை முதலமைச்சராக இருந்து அவர் போட்ட கையெழுத்தின் காரணமாகத் தான் தமிழ்நாட்டின் முன்னெழுத்தாக 'மு.க.' என்ற இரண்டெழுத்து உருவானது.

**தமிழ்நாட்டையே திருவூராக ஆக்கியவர்!**

திருவாரூரில் புறப்பட்ட கலைஞர், தமிழ்நாட்டையே திருவூராக ஆக்கினார். தமிழ்நாடே ஆரூரார் உருவாக்கிய நாடாகக் காட்சி அளிக்கிறது!

கலைஞர் போகாத ஊரில்லை;
பேசாத நகரில்லை!

தமிழ்மண் பயனுற வாழ்ந்த கலைஞரை எல்லாத் திட்டங்களும் நினைவூட்டியபடியே, அவர் நினைவைப் போற்றும் சின்னங்களாக வானுயர அமைந்து வாழ்த்துகின்றன.

தமிழ்நாட்டுப் பெருந்தலைவர்களுக்கு எல்லாம் நினைவு மண்டபங்கள் எழுப்பிய கலைஞருக்கு, ஆறடி மண் கேட்டுப் போராட வேண்டியதாக இருந்தது.

உலகம் 'கலைஞர்' பெயரை உச்சரித்துக் கொண்டே இருக்கும்!

கலைஞர் என்றால் போராட்டம்! இதுதானே அவரது வாழ்வும் வரலாறும் நானிலத்துக்குச் சொல்கிறது!

போராட்டம் மட்டுமல்ல, கலைஞர் என்றால் வெற்றி என்பதன் அடையாளம் இந்த நினைவிடம்!

**அமைச்சர் எ.வ.வேலுவின் அர்ப்பணிப்பு உணர்வால் உருவான 'கலைஞரின் உலகம்'**


பொதுப்பணித் துறை அமைச்சரும் எதிலும் வல்லவர் என்று தலைவரால் போற்றப்பட்டவருமான எ.வ.வேலு அவர்களின் அர்ப்பணிப்பு உணர்வால் மிகச்சீரிய முறையில் கட்டி எழுப்பப்பட்டுள்ளது 'கலைஞரின் உலகம்!'

'கலைஞரின் உலகம்' என்ற இந்த நினைவிடம், இந்தியாவின் இரண்டாவது பெரிய கடற்கரையில் இருக்கும் முதல் அதிசயம்!

கலைஞர் எனும் உலகத்தால் நாம் சுற்றுகிறோம்... தமிழ்நாடு சுற்றுகிறது... கலைஞர் உலகு ஆள்வார்! உலகம் கலைஞர் பெயரை உச்சரித்துக் கொண்டே இருக்கும்.

கலைஞர் நினைவிடத்துக்குள் வாருங்கள். கலைஞர் வாழ்ந்த வாழ்க்கையைக் காணலாம். கலைஞரோடு வாழலாம்... வாழலாம்... வாழலாம்...

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அந்தக் காணொலியில் உரையாற்றியிருந்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (26.2.2024) சென்னை, மெரினா கடற்கரையில், தமிழ்ச் சமுதாயத்தின் தன்னிகரில்லாத் தலைவர்களாகத் திகழும் பேரறிஞர் அண்ணா அவர்களின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடத்தையும், புதிதாக அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தையும் திறந்து வைத்து, நினைவிடத்தில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் உலகம் அரங்கத்தை திறந்து வைத்துப் பார்வையிட்டார்.





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.2.2024) சென்னை, மெரினா கடற்கரையில், தமிழ்ச் சமுதாயத்தின் தன்னிகரில்லா தலைவர்களாக திகழும் பேரறிஞர் அண்ணா அவர்களின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடத்தையும், புதிதாக அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தையும் திறந்து வைத்து, அண்ணா – கலைஞர் நினைவிடங்களில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில், சட்டமன்றப் பேரவை தலைவர் மு. அப்பாவு, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி., இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் கே.எம். காதர் மொகிதீன், பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்ற கட்சித் தலைவர் ஜி.கே. மணி, மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், கவிப்பேரரசு வைரமுத்து, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ‘அண்ணா நினைவிடம்’ - ‘கலைஞர் நினைவிடம்’ திறப்பு நிகழ்ச்சித் தொகுப்பு !

## முதல் பக்கத் தொடர்ச்சி

சதுக்கத்தின் பின்புறம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புன்னகை பூத்தமுகம் பொன்னிறத்தில் மிளிரும் வண்ணமும் சுற்றிலும் மின்விளக்குகள் விண்மீன்களாக ஒளிரும் வண்ணமும் அமைக்கப்பட்டுள்ளன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சதுக்கத்தின் கீழே நிலவறைப் பகுதியில், **“கலைஞர் உலகம்”** எனும் பெயரில் அருங்காட்சியகம் அமைக்கப் பட்டு, கலைஞர் நிர்மாணித்த திருவள்ளுவர் சிலை, குடிசை மாற்றுவாரியம் முதலியவை படங்களாகவும், தமிழ்த்தாய் வாழ்த்தும், ‘தமிழ்த்தாய் வாழ்த்து அரசு நிகழ்ச்சிகளில் பாடப்பட வேண்டும்’ என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 23.11.1970 அன்று பிறப்பித்த அரசாணையும், ‘தமிழ்த் தாய் வாழ்த்து மாநிலப் பாடல்’ என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 17.12.2021 அன்று பிறப்பித்த அரசாணையும் அவர்களின் படங்களுடன் இடம் பெற்றுள்ளன.

மேலும், **“கலைஞரின் எழிலோவியங்கள்”** எனும் அறையில் கலைஞரின் இளமைக் காலம் முதல், அவர் வரலாற்றில் இடம் பெற்ற நிகழ்வுகள், கலைஞரின் படைப்புகள் அவர் சந்தித்த போராட்டங்கள், நிறைவேற்றிய பல்வேறு திட்டங்கள் தொடர்பான புகைப் படங்கள் அமைந்துள்ளன.

**“உரிமைப் போராளி கலைஞர்”** எனும் அறையில் – தேசியக் கொடியை மாநில முதலமைச்சர்கள் ஏற்றிட உரிமை பெற்றுத் தந்த கலைஞரின் வெற்றியைக் குறிக்கும் வகையில்,

சென்னைக் கோட்டையில் முதன் முதலாக தேசியக் கொடியை ஏற்றி வைத்து கலைஞர் உரையாற்றும் காட்சி, தலைமைச் செயலகத்தின் முகப்புத் தோற்றத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக, கோபாலபுரம் இல்லத்தில் கலைஞர் அமர்ந்திருக்கும் தோற்றம் அருகில் நின்று புகைப்படம் எடுத்துக் கொள்ளவும், உடனடியாக புகைப்படம் கிடைக்கும் வசதியுடனும் அமைக்கப்பட்டுள்ளது.

அதன் வலப்புறத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மெழுகுச் சிலையும் அமைக்கப்பட்டுள்ளது.

கலைஞரின் படைப்புகளான ‘நெஞ்சுக்கு நீதி’, ‘குறளோவியம்’, ‘தென்பாண்டிச் சிங்கம்’ உள்ளிட்ட 8 நூல்களின் பெயர்கள் மீது நாம் கை வைத்தால், அந்த நூல்கள் பற்றிய விளக்கம் வீடியோவாகத் தோன்றி நமக்கு எடுத்துரைக்கும்.

**“அரசியல் கலை அறிஞர் கலைஞர்”** எனும் அறையில் சுமார் 20 நிமிடங்கள் கலைஞர் அவர்களின் பிறப்பு முதல் இறுதி நாள் வரையான முக்கிய வரலாற்று நிகழ்வுகள் அருமையான படக் காட்சிகளாக, **‘கலையும் அரசியலும்’** எனும் தலைப்பில் நம்முன் தோன்றி வியக்க வைக்கும் .

**“சரித்திர நாயகனின் சாதனைப் பயணம்”** எனும் அறையில், திருவாரூர் முதல் சென்னை வரை ரயிலில் பயணிப்பது போன்ற உணர்வை நமக்கு ஏற்படுத்தி, தஞ்சை, திருச்சி, மதுரை, நெல்லை, சேலம் ஆகிய ரயில் நிலையங்களைக் கடக்கும் போது, அந்தந்த ஊர்களில் கலைஞர் வாழ்வோடு தொடர்புடைய நிகழ்வுகள் காட்சிகளாகத் தோன்றும்.

அறைகளுக்கு வெளியே அமைந்துள்ள நடையில் இருபுறங்களிலும்,

**பெண்ணியக் காவலர்,**

**ஏழைப் பங்காளர்,**

**நவீன தமிழ் நாட்டின் சிற்பி,**

**உலகளாவிய ஆளுமைகளுடன்**

**கலைஞர்**

– எனும் முதலான தலைப்புகளில் அமைந்த அரிய புகைப்படங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன.

அப்பகுதியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் தொடங்கி வைக்கப்பட்ட பல்வேறு திட்டங்களின் தொடக்க விழா நிகழ்ச்சிகள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படுகின்றன.

**மகன் தந்தைக்காற்றும் உதவி...!**

அதற்கு நேர் எதிரே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் தோன்றும் அருமையான புகைப்படம் பெரிய அளவில் அமைந்து **“மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி”** எனும் குறள் தொடரைத் தலைப்பாகக் கொண்டுள்ளது.

மேலும், இப்பகுதியின் இறுதியில் காந்த விசையைப் பயன்படுத்தி அமர்ந்த நிலையில் முத்தமிழறிஞர் கலைஞர் அந்தரத்தில் மிதக்கும் காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

இச்சதுக்கத்தில் கலைஞர் எழுதிய நூல்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், வரும் வழியில் தமிழர்களின் கலாச்சார மையம், வள்ளுவர் கோட்டம், பாம்பன் பாலம், ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை முகப்புக் கட்டடம், மெட்ரோ ரயில், அண்ணா நூற்றாண்டு நூலகம் ஆகிய முத்தமிழறிஞர் கலைஞர் படைத்த நவீனங்களின் தோற்றம் வண்ண விளக்கொளியில் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பொன்மொழிகள் கற்பாறைகளில் தமிழிலும் ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டு நம் இதயத்திலும் பதியும் வண்ணம் அருமையாக அமைக்கப்பட்டுள்ளன.

**இச்சிறப்புமிக்க பேரறிஞர் அண்ணா அவர்களின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடத்தையும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புதிய நினைவிடத்தையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் 26.2.2024 திறந்து வைத்தார்.**

இந்நிகழ்ச்சியில், சட்டமன்றப் பேரவை தலைவர் மு.அப்பாவு, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, ம.தி.மு.க. பொதுச் செயலாளர், வைகோ எம்.பி., இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் கே.எம். காதர் மொகிதீன், பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்ற கட்சித் தலைவர் ஜி.கே. மணி, மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், கவிப்பேரரசு வைரமுத்து, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நிவேதா எம்.முருகன் தலைமை! ம.சுப்பராயன் வரவேற்புரை!

# சீர்காழியில் இன்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

### திருச்சி சிவா எம்.பி., - அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

*மயிலாடுதுறை , பிப்.28*

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல்கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் சீர்காழி பழைய பேருந்து நிலையத்தில் இன்று (28ம் தேதி) நடைபெறுகிறது. பொதுக்கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமை தாங்குகிறார். சீர்காழி நகரக் கழகச் செயலாளரும், நகர்மன்ற துணைத் தலைவருமான ம.சுப்பராயன் வரவேற்புரையாற்றுகிறார். ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என்.இளையபெருமாள், மூவலூர் எம்.மூர்த்தி, மங்கை எம்.சங்கர், செல்லசேதுரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், ஏ.ஜி.ஜெ.பிரபாகரன், எம்.அப்துல்மாலிக், பி.எம்.அன்பழகன், ஞான.இமையநாதன், ப.முருகமணி, ஏ.ஆர்.ராஜா, கு.வைத்தியநாதன், பஞ்சுகுமார், அமுர்த.விஜயகுமார், மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.சம்சுதீன், எம்.அன்புச்செழியன், எஸ்.கே.முத்துராஜா, என்.அண்ணாதுரை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். பொதுக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி., சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள். கூட்டத்தில் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில விவசாயத் தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீலன், எம்.எம்.சித்திக், ஏ.சி.என்.விஜயபாலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, முத்து.மகேந்திரன், இராம.இளங்கோவன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், பொருளாளர் மகா.அலெக்சாண்டர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.சங்கரநாராயணன், அ.காந்தி, பி.சிவதாஸ், நத்தம் வின்சென்ட், ஜெ.கபிலன், ஹர்சத், எஸ்.வெற்றிவேல், எஸ்.சுவாமிநாதன், சுபா நெடுஞ்செழியன், பி.கென்னடி மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், ஒன்றியக் குழு தலைவர்கள் வி.ஜெயபிரகாஷ், கே.மகேந்திரன், காமாட்சிமூர்த்தி, கமலஜோதிதேவேந்திரன், நந்தினிஸ்ரீதர், சீர்காழி நகர் மன்றத் தலைவர் துர்கா பரமேஸ்வரி ராஜசேகர், பேரூராட்சி தலைவர்கள் கண்மணிஅறிவழகன், சுகுணாசங்கரிகுமரவேல், பூங்கொடி அலெக்சாண்டர், சங்கீதாமாரியப்பன்,

மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் எம்.கே.மருது, வி.எஸ்.என்.செந்தில், ஆர்.முருகன், இரா.மனோகரன், வை.செளமியன், இரா.முருகப்பா, ஆர்.செல்வராஜ், இரா.காழிகலைவாணன், வி.எஸ்.பிரபாகர், எஸ்.எம்.சம்சுதீன், அறிவு (எ) க.அறிவழகன், கே.விக்னேஷ், எஸ்.பாலாஜி, எம்.எஸ்.முத்துகுபேரன், காளி.சேதப்பன், ஆர்.சாந்தி, டி.ராஜ்குமார், ஆர்.எஸ்.ஸ்ரீதர், தீபாசத்தியேந்திரன், மா.வைத்தியநாதன், பெரு.வீரமணி, வெடி எஸ்.பாலமுருகன், ஆர்.தன்ராஜ், மற்றும் மாவட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள் மற்றும் சீர்காழி நகரக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.




கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவர் அணி இணை செயலாளருமான டாக்டர்.இரா.இலட்சுமணன் விழுப்புரம் நகரம், கீழ்பெரும்பாக்கம், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் 2022 – 2023 ஆம் ஆண்டிற்கான தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட புதிய பகுதி நேர நியாயவிலைக் கடை கட்டிடத்தை திறந்து வைத்தார். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், நகர செயலாளர் சக்கரை, நகர்மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, நகராட்சி ஆணையர், நகர்மன்ற உறுப்பினர்கள் மகாலட்சுமி வைத்தியநாதன், புல்லட் மணி, மணவாளன், கன்னிகா வெற்றிவேல், ஜெயந்தி மணிவண்ணன், கோமதி பாஸ்கர், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி தலைவர் நடராஜன், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் குமார், இளஞ்செழியன், பிரதிநிதிகள் சந்தோஷ், சிவா, ராஜா முகமது மற்றும் கோவில் சிவா, ராஜேந்திரன், ராஜமூர்த்தி, சீனிவாசன், முத்துவேல், ஜெயபிரகாஷ், கோபி, முரளி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருத்துறைப்பூண்டி இர.செல்வராசன்

**பிப்ரவரி 28 (1992)**



**திருத்துறைப்பூண்டி நகரச் செயலாளராகவும் – பேரூராட்சி மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**‘மிசா’விலும் மற்றும் தலைமைக் கழகம் அறிவித்த சட்ட எரிப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**குடந்தை, மகாமக குள மரணங்கள் குறித்து நீதிவிசாரணை கோரி, கழகத்தின் சார்பில் நடைபெற்ற கண்டனப் பேரணியில் பங்கேற்றபோது மாரடைப்பால் காலமானார்.**

**“திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் கழகச் சிங்கமாக நடைபோட்டு, அடங்காத ஆர்வத்துடன் பணியாற்றிய தம்பி. சாவு முனையிலும் அந்தத் தம்பி கழகப் பணியே ஆற்றியுள்ளார்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**



திருச்சி தெற்கு மாவட்டம், இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல் நிகழ்ச்சியை தமிழக பள்ளிக் கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்தார். தமிழக அரசு கொண்டுவந்துள்ள மக்கள் நலத்திட்டங்கள் குறித்த துண்டு பிரசுரங்களை வீடு வீடாகச் சென்று பெண்களிடம் வழங்கிய அமைச்சர் தமிழக அரசு கொண்டு வந்துள்ள திட்டங்கள் குறித்து விளக்கிக் கூறியதோடு குழந்தைகளின் கல்வி குறித்தும் கேட்டறிந்தார். ஒன்றிய அரசு தமிழகத்தை வஞ்சிக்கிறது. இதையெல்லாம் மீறி ஒரு நல்லாட்சியை தமிழக அரசு செய்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு இதனை நீங்கள் மட்டும் தெரிந்து கொண்டால் போதாது மற்றவர்களுக்கும் எடுத்து கூறி வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என கூறிய அமைச்சர் ஒன்றிய அரசு வஞ்சித்தாலும் தொடர்ந்து தமிழக அரசு மக்களுக்கான திட்டங்களை செயல்படுத்தும் என்று கூறினார். அப்போது அமைச்சரிடம் தமிழக அரசின் திட்டங்கள் பயனுள்ளதாக இருப்பதாக மக்கள் கருத்து தெரிவித்தனர். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மதிவாணன் தொகுதி பொறுப்பாளர் ராஜேஷ் பகுதி கழகச் செயலாளர் மணிவேல் மாவட்டத் துணைச் செயலாளர் செங்குட்டுவன் மற்றும் பகுதி வட்ட கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அமைச்சர் சு.முத்துசாமி பங்கேற்கிறார்! முதல்வர் பிறந்த நாளையொட்டி

# கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் இரத்ததான முகாம்!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிவிப்பு!



கோவை, பிப். 28 -

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு, கோவை மாநகர் மாவட்ட திமுக, தளபதி இரத்ததான இயக்கம் சார்பில், கோவை அரசு மருத்துவமனைக்கு இரத்த தானம் வழங்கும் முகாம் நடைபெறுகிறது என கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் அறிவித்துள்ளார். இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் 71 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, இன்று (28.02.2024 - புதன் கிழமை), காலை 8 மணி முதல், மதியம் 1 மணி வரை, வரதராஜபுரம் சாய் விவாகா மகாலில், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க., தளபதி இரத்ததான இயக்கம் சார்பில், கோவை அரசு மருத்துவமனைக்கு இரத்ததானம் வழங்கும் முகாம் நடைபெறுகிறது. இதில் தமிழ்நாடு வீட்டுவசதித்துறை நகர்ப்புற வளர்ச்சி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி இம்முகாமில் பங்கேற்று, வாழ்த்துரை வழங்குகிறார்.

அதுசமயம், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க.விற்கு உட்பட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வா கிகள், மேயர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு நிர்வாகிகள், பகுதிக்கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதிக்கழக, வட்டக்கழக நிர்வாகிகள், BLA 2 பாக முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், கழகத் தொண்டர்கள், கழகச் செயல்வீரர்கள், கழக உடன்பிறப்புக்கள், பொது மக்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# விழுப்புரம் தெற்கு மாவட்ட செயல்வீரர்கள் ஆலோசனைக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. அறிக்கை!



விழுப்புரம், பிப். 28 -

விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (28.02.2024 - புதன் கிழமை) காலை 10.00 மணியளவில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கில் மாவட்ட அவைத்தலைவர் ம.ஜெயசந்திரன் தலைமையிலும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெறுகிறது.

கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்கள். அவ்வமயம் முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் , அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அனைத்து உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:**

1. வருகிற மார்ச் 01 கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் 71 வது பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவது .
2. வருகிற 2024ல் நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தல் பணிகள்
3. கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி. நித்யானந்தம்

பிப்ரவரி 28 (2020)



இளமைக் காலம் முதல் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

நகர இளைஞர் அணி அமைப்பாளர், நகரச் செயலாளர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

வாலாஜா நகர்மன்ற உறுப்பினராகவும், பின்னர் நகர்மன்றத் தலைவராகவும் பதவி வகித்து அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.




புதுக்கோட்டை திருவப்பூர் முத்துமாரியம்மன் ஜல்லிக்கட்டு விழாவில் தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , தமிழக சுற்றுச்சூழல் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், டாக்டர் முத்துராஜா எம்.எல்.ஏ., நகர கழகச் செயலாளர் ஆ.செந்தில், மாவட்டத் துணைச் செயலாளர் க.மதியழகன், இளைஞர் அணி அமைப்பாளர் சு.சண்முகம், மாவட்ட கவுன்சிலர் மு.க.ராமகிருஷ்ணன், முன்னாள் நகரச் செயலாளர் நைனா முகம்மது, அரசு வழக்கறிஞர் எம்.சிவா, எம்.எம்.பாலு மற்றும் பலர் கண்டுகளித்தனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# சேலம் மத்திய மாவட்டத்தில் கழகக் கொடியேற்றி நல உதவிகள் வழங்குவீர்!

## மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் அறிக்கை!



சேலம், பிப். 28 -

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்த நாள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் வழியில் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக கழகத்தில் உழைப்பு, தியாகம், நிர்வாக திறமை, கண்ணியம் மிக்க பண்பு என கழக தோழர்கள் மற்றும் தமிழக மக்களின் உள்ளம் கவர்ந்த தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 71 ஆம் ஆண்டு பிறந்த நாள் மார்ச் 1 ஆம் நாள். இந்த நாள் கழக தோழர்களுக்கும் தமிழ் மொழி உணர்வு, தமிழ் இன உணர்வு கொண்ட பொதுமக்களுக்கும், சான்றோர் பெருமக்களுக்கும் உவகையும், உள்ளத்தில் மகிழ்ச்சியும் பொங்கிடும் நாள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைவர் தளபதி அவர்கள் குறித்து குறிப்பிடும் போது திறமை யானவர், கெட்டிக்காரரர் தன் தந்தையைப் போலவே அவரும் வெற்றி பெறுவார் என பாராட்டியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்கள் தளபதி அவர்கள் குறித்து கூறும் போது அறிவாலயப் பணி என்றாலும், சிறைச் சாலைக்கு செல் என்றாலும், தலைவர் சொல் மிக்க மந்திரம் இல்லை என்று ஏற்றுக்கொண்டு அமைதி காப்பவர் தளபதி என பாராட்டியுள்ளார்.

இனமான பேராசிரியர் அவர்கள் தளபதி அவர்களைப் பற்றி குறிப்பிடும் போது தியாகத்தால் பெருமை பெற்று, தொண்டினால் பதவி பெற்று, சாதனையால் புகழ்பெற்றவர் தளபதி என பாராட்டியுள்ளார். மாற்று முகாம்களில் உள்ளவர்களும் மேயராக பணியாற்றிய போதும் வெளிநாட்டவர்கள் உள்ளிட்ட பலரும் நம் தலைவரை புகழ்ந்து பாராட்டியுள்ளனர்.

இவ்வளவு சிறப்புகளையும் பெற்ற நம் உயிரனைய கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளில் சேலம் மத்திய மாவட்டத்தில் உள்ள மாநகர பகுதிகளில் உள்ள கோட்டங்களில் உள்ள தெருக்கள் தோறும், பேரூர் ஊராட்சிகளில் உள்ள கிளைக் கழகங்கள் தோறும் கழகக் கொடிகளை உயர்த்தி வைத்தும் இனிப்புகள் வழங்கியும், ஏழை எளியோர், மாணவ, மாணவியர் என அனைவருக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கியும், எழுச்சியோடும், ஏற்றத்தோடும் கொண்டாடிட வேண்டும்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்கிற பேரறிஞர் அண்ணாவின் கூற்றுக்கேற்ப கடந்த இரண்டரை ஆண்டு கால ஆட்சியில் இந்தியாவிலேயே பல முன்னோடித் திட்டங்களை பிற மாநிலங்கள் பின்பற்றும் வகையில் இந்திய துணைக்கண்டமும், ஏன் உலகத்தின் பல்வேறு நாடுகளும் பாராட்டுகின்ற வகையில் ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்கிற திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் சாதனை நாயகர் நமது கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை மகிழ்ச்சியோடு, எழுச்சியோடு, உணர்வுபூர்வமாக சிறப்பாக கொண்டாட வேண்டும் என அனைத்து நிர்வாகிகளையும், கழகத் தோழர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு இரா. இராஜேந்திரன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கீழ்வேளூர் வெங்கிடங்கால்

# அ.சந்தானம் துணைவியார் ச.நீலாவதி அம்மையார் மறைவு!

நாகை, பிப். 28 -

நாகை மாவட்டம் கீழ்வேளூர் ஒன்றிய முன்னாள் செயலாளரும் , முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நெருங்கிய நண்பருமான வெங்கிடங்கால் மிசா அ. சந்தானம் அவர்களின் துணைவியார் ச.நீலாவதி அம்மையார் நேற்று (27.2.2024 ) காலை 9.00 அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த அமையார் நீலாவதிக்கு மகள்கள் தமிழரசி குமரவேல், கலையரசி சிங்காரவேல் ஆகியோர் உள்ளனர்.

நாகை மாவட்டம் கீழ்வேளூர் ஒன்றியம் வெங்கிடங்கலில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள உடலுக்கு கழக நிர்வாகிகள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

அம்மையார் இறுதி ஊர்வலம் இன்று (28.2.2024) காலை 9.00 மணிக்கு வெங்கிடங்காலில் உள்ள இடுகாட்டில் இறுதி சடங்குகள் நடைபெறுகின்றன.

தருமபுரி கிழக்கு மாவட்ட கழகம் சார்பில்

# இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல் பிரச்சாரம்!

## தடங்கம் சுப்பிரமணி பங்கேற்பு!

தருமபுரி, பிப். 28 -

தருமபுரி கிழக்கு மாவட்ட கழகம் சார்பில் தருமபுரி மாவட்ட கழக அலுவலம் தளபதி அரங்கத்தில் தருமபுரி கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் சி.செல்வராஜ் தலைமையில்,சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் டாக்டர் ஏ.கே.தருண் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ சுப்ரமணி இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல் திண்ணை பிரச்சாரம்,கழக தலைவரின் பிறந்தநாளை கொண்டாடுவது,நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் நடத்துவது, வருகின்ற நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் குறித்து விளக்கி சிறப்புரை யாற்றினார்.

கூட்டத்தில் பென்னாகரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் குப்பம் கே.வி.கோபி மற்றும் மாநில நிர்வாகிகள் தாமரைச்செல்வன்,தர்மசெல்வன், செந்தில் குமார், மாவட்ட நிர்வாகிகள் வே.தங்கமணி, உமாசங்கர், ஆறுமுகம், ரேணுகா தேவி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் நடராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.ஜி,சேகர், சரஸ்வதி துரைசாமி, சோலை மணி,வேலுமணி, ஒன்றிய கழக செயலாளர்கள் கே.எஸ்.ஆர்.சேட்டு, ஏ,எஸ்.சண்முகம், வைகுந்தம், மல்லமுத்து, நகர கழக செயலாளர் நாட்டான் மாது, கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் தலைவர்கள்,துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் , பூத் ஒருங்கிணைப்பாளர்கள், BLA2 நிர்வாகி கள் என கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். காத்தவராயன்

பிப்ரவரி 28 (2020)



தனது இளமைப் பருவத்திலேயே கழக உறுப்பினராகி பணியாற்றி வந்தவர்.

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட பிரதிநிதி, மாவட்ட துணைச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

பேர்ணாம்பட்டு நகர்மன்றத் தலைவராகவும், 2019ல் நடைபெற்ற குடியாத்தம் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று மக்கள் பணியாற்றி அவர்கள் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த சட்டநகல் எரிப்பு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.2.2024) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக கோவை ஜி.கே.என்.எம். மருத்துவமனையின் மருத்துவ ஆராய்ச்சி மற்றும் வெளிநோயாளிகள் மையத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், சென்னையிலிருந்து கே.என்.சி.அறக்கட்டளையின் அறங்காவலர்கள் சஞ்சய் ஜெயவர்த்தனவேலு, டாக்டர் லலிதா தேவி சஞ்சய் ஜெயவர்த்தனவேலு, கோவையிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் பாடி, கே.என்.சி.அறக்கட்டளையின் தலைவர் எஸ்.பதி, துணைத் தலைவர் ஆர்.கோபிநாத், ஜி.கே.என்.எம். மருத்துவமனை முதன்மை செயல் அலுவலர் டாக்டர் ரகுபதி வேலுசாமி மற்றும் மருத்துவமனை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி தீர்மானங்களை விளக்கிப் பேசினார்.

### ஒப்பந்தத்தை மீறி பாலாற்றின் குறுக்கே அணை கட்டும் ஆந்திர அரசின் நடவடிக்கை

# உச்சநீதிமன்றத்தை அவமதிக்கும் தவறான முயற்சியாகும்!

## நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன் அறிக்கை!

**சென்னை, பிப்.28-**

**ஏற்கனவே உள்ள 1892 ஆம் ஆண்டின் ஒப்பந்தத்தை மீறி, பாலாற்றின் குறுக்கே அணை கட்ட ஆந்திர அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கையானது, இது தொடர்பாக விசாரணை நடத்தி வரும் உச்ச நீதிமன்றத்தை அவமதிப்பதாகவும், தவறான முயற்சி என்றும் நீர்வளத் துறை அமைச்சர் துரை முருகன் அவர்கள் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.**



பாலாற்றின் குறுக்கே புதிய அணை கட்டுவதற்கு ஆந்திர அரசு அடிக்கல் நாட்டி உள்ளதாக வந்துள்ள செய்திக்கு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் மறுப்பு அறிக்கை வருமாறு:-

பாலாறு ஒரு பன்மாநில நதி ஆகும். இது 1892 - ஆம் ஆண்டைய மதராஸ் – மைசூர் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடி, பன்மாநிலங்களுக்கு இடையே பாயும் நதிகளில் பாலாறும் ஒன்றாகும்.

1892 ஆம் ஆண்டின் ஒப்பந்தத்தின்படி, மேற்பகுதியிலுள்ள மாநிலங்கள் கீழ்ப்பகுதியிலுள்ள மாநிலங்களின் முன் அனுமதி இல்லாமல், எந்த அணை கட்டுமானத்தையோ அல்லது நீரைத் தடுப்பதற்கான கட்டுமானத்தையோ அல்லது நீரைத் திருப்புவதற்கும், நீரைத் தேக்குவதற்கும் உரிய எந்த ஒரு செயலையும் மேற்கொள்ள முடியாது.

இந்த ஒப்பந்தம் படுகை சம்பந்தப்பட்ட மாநிலங்களையும் கட்டுப்படுத்தும். மேலும் இந்த ஒப்பந்தம் செல்லுபடியாகும் என 16.02.2018 அன்று உச்சநீதிமன்றம் காவிரி சம்பந்தப்பட்ட பிரச்சினையில் அளித்த தீர்ப்பில் தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

2018 – SCC(1) para 4.4.6.1

4.4.6.1 After coming into force of the 1947 Act, the doctrine of paramountcy has no room for application as the Government of India became the full sovereign authority. The two Agreements of 1892 and 1924 had neither any political arrangement nor touched any facet of sovereignty of India. Per contra, the Agreements cover the areas of large public interests which do not have any political element and in this backdrop, the agreements are neither inoperative nor completely extinct.

இவ்வாறு இருக்கையில் ஆந்திர அரசு தன்னிச்சையாக ஒரு புதிய அணையை கட்ட முயற்சிப்பது 1892 ஆம் ஆண்டின் ஒப்பந்தத்தை மீறுவதாகும்.

மேலும் உச்சநீதிமன்றம் மேலே குறிப்பிட்டுள்ள கருத்துக்கு முற்றிலும் மாறுப்பட்ட செயலாகும். இது ஒரு தவறான முயற்சியாகும். மேலும் இதற்கு முன் சித்தூர் மாவட்டம் கணேஷபுரத்தில் ஆந்திர அரசு தன்னிச்சையாக ஒரு அணையை கட்ட முயற்சித்த போது அச்செயலை ஆட்சேபித்து தமிழ்நாடு அரசு 10.02.2006 அன்று உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்கு (O.S. No. 2 of 2006) தாக்கல் செய்தது. இவ்வழக்கில் இரு மாநில சாட்சியாளர்களது குறுக்கு விசாரணை 2018 ல் முடிவடைந்தது. இவ்வழக்கின் இறுதி விசாரணை நடக்க உள்ளது.

இதற்கிடையே ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே ஏற்கெனவே அமைக்கப்பட்ட தடுப்பாணைகளின் உயரத்தை அதிகரித்து இருப்பதை எதிர்த்து மற்றும் ஒரு சிவில் வழக்கு உச்சநீதிமன்றத்தில், O.S. 3 of 2016 தொடுத்துள்ளது. இந்த வழக்கும் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இவ்வாறு 2 அசல் வழக்குகளும் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் போது தன்னிச்சையாக ஆந்திர அரசு பாலாற்றில் ஒரு புதிய அணையை கட்ட முயற்சிப்பதும், அதற்காக அதனுடைய நிதிநிலை அறிக்கையில் (Budget) பணம் ஒதுக்கியிருப்பதும் முற்றிலும் உச்ச நீதிமன்றத்தை அவமதிப்பதாகத்தான் கருத வேண்டும். இச்செயல் இருமாநிலங்களின் நட்பிற்கு ஏற்றதல்ல. மேலும் கூட்டாட்சிக்கு எதிரானது.

ஆகையால் ஆந்திர அரசு இந்த அணை கட்டும் பிரச்சினை, உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் இருக்கும்போது இம்மாதிரியான எந்த வித செயல்களையும் மேற்கொள்ள கூடாது என இரு மாநிலங்களின் நலன் கருதி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் துரை முருகன் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# இராணிப்பேட்டை மாவட்டம் முழுவதும் நல உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி அறிவிப்பு!

இராணிப்பேட்டை, பிப். 28-

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி தலைமையில் நடந்தது. மாநில சுற்றுச்சூழல் அணி துணை செயலாளர் ஆர்.விநோத் காந்தி, மாவட்ட துணை செயலாளர் மு.சிவானந்தம், மாவட்டப் பொருளாளர் ஏ.வி.சாரதி தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.கண்ணையன், க.சுந்தரம், அ.சோகன், எம் .எஸ். கலைமணி ஆகியோர் அனைவரையும் வரவேற்று பேசினார்கள்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விளக்கி அவர் பேசியது வருமாறு:-

மார்ச் 1ஆம் தேதி அன்று நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் கழகத் தலைவர் அவர்களின் 71 ஆம் ஆண்டு அகவையில் அடியெடுத்து வைக்கிறார். ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரரான நம் தலைவர் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்பில் அமர வைத்த பெருமையை பெற்றுத் தந்துள்ளார்.

தந்தை பெரியாரின் சமூக நீதியையும் பேரறிஞர் அண்ணாவின் மாநில சுயாட்சி கொள்கையையும் தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் சமூக நலத்திட்டங்களையும் மனதில் தாங்கி திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டு இருக்கிறார், கழகத் தலைவர் அவர்கள்.

அத்தகைய பெருமை மிகு தலைவரின் பிறந்த நாளை நாம் அனைவரும் சீரிய வகையில் கொண்டாடும் விதமாக திராவிட மாடல் அரசின் சாதனைகள் மற்றும் மற்றும் அரசின் நிதிநிலை அறிக்கை விளக்கும் பொதுக் கூட்டங்களாகவும் கழகக் கொடி ஏற்றி இனிப்பு வழங்குதலும் பள்ளி மாணவ - மாணவியர்களுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்குதலும் அன்னதானம், கண் தானம், ரத்த தானம் ஆகிய நிகழ்ச்சிகளை நமது மாவட்டம் முழுவதும் ஊர் கிளைகள் தோறும் வட்டங்கள் தோறும் ஒன்றிய, நகர பேரூர் கழகத்தின் சார்பிலும் அனைத்து அணிகளின் சார்பிலும் சிறப்பாக விழா நடத்தி கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்கு தரவேண்டிய நிதியை கூட தராமல் வஞ்சிக்கும் சூழலில் தமிழ்நாட்டு மாணவர் களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் தவப்புதல்வன் திட்டம், குடிசை இல்லாத தமிழ்நாட்டை உருவாக்க 8 லட்சம் வீடுகள் கட்டி தரும் ‘கலைஞரின் கனவு இல்லம்’ திட்டம், வறுமை இல்லா தமிழ்நாட்டை உருவாக்குவதற்காக 5 லட்சம் ஏழை குடும்பங்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்கும் முதலமைச்சரின் தாயுமாணவர் திட்டம் என பல்வேறு தரப்பினரையும் குறித்து சிந்தித்து, தமிழ் சமூகத்தின் ஒவ்வொருவரும் பயன்பெறும் வகையில் நிதி நிலை அறிக்கை திட்டங்களை அறிவித்து திராவிட மாடலை உலகமே பாராட்ட செய்து வரும் முதலமைச்சரின் சீரிய நிர்வாக திறனையும் வழிகாட்டும் பாங்கையும் கூட்டம் மனமாற வாழ்த்தி நன்றி பாராட்டியது.

திராவிட மாடல் ஆட்சியில் மூன்று ஆண்டு சாதனைகளையும் தமிழ்நாடு அரசின் 2024- 2025 ஆண்டுக்காக நிதி நிலை அறிக்கையும் சிறப்பம்சங்களையும் வீடு தோறும் கொண்டு சேர்க்கவும் அதே சமயம் ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டுக்கும் ,தமிழுக்கும் தமிழர்களுக்கும் செய்து வரும் அநீதிகளை தமிழ்நாட்டில் ஒவ்வொருவருக்கும் எடுத்துரைக்கும் வகையில் பிப்ரவரி 26 ஆம் தேதியிலிருந்து இல்லந்தோறும் ஸ்டாலின் குரல் என்ற திண்ணை பிரச்சாரத்தை நமதுமாவட்டம் முழுவதும் தொடங்குவதென தீர்மானிக்கிறது.

ஒவ்வொரு நாளும் மாலை நேரங்களில் பூத் கமிட்டியினர் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று துண்டறிக்கைகளை வழங்கி ஒவ்வொரு வீட்டில் உள்ளவர்களிடம் இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல் என்ற பரப்புரை குறித்து சில நிமிடங்களாவது விளக்கி, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. மற்றும் அதனோடு மறைமுக கூட்டணியில் இருக்கும் அ.தி.மு.க.வை முழுமையாக வீழ்த்தி தமிழக முதல்வர் கழகத் தலைவர் குரல் டெல்லியிலும் நிறைவேற்றுவதை உறுதி செய்திட வேண்டுமென கூட்டம் தீர்மானிக்கிறது.

பி.எல்.ஏ2, OMR வடிவத்தை மிக விரைவில் ஒன்றிய, நகர, பேரூர், செயலாளர்கள் பூர்த்தி செய்து மாவட்டக் கழகத்தில் ஒப்படைப்பது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் ஆர். தமிழ்ச்செல்வன், ஆர்.சௌந்தர் கே.பசுபதி பெ.வடிவேலு, ஆர்.பி. ரவிச்சந்திரன் எஸ்.ஜி.சி. பெருமாள், டி. கிருஷ்ணமூர்த்தி, எஸ்.என்.பூர்ண சந்திரன், வி.எம்.சந்திரன், எம். பாலாஜி சேஷா வெங்கட், எம் சண்முகம், எம்.வி. பாண்டுரங்கன் ஏ.வி. நந்தகுமார், எஸ்.அசோக், ஜெ. ரமேஷ், வி.பி.எஸ். கலைசந்தர், நகர செயலாளர்கள் வி.எல்ஜோதி, ஏ..வி. சரவணன் டி.தில்லை, பி.பூங்காவனம், எஸ்.டி.முகமது அமீன் எம்.கோபி, பொதுக் குழு உறுப்பினர்கள் சி. மாணிக்கம்,கே.சிட்டிபாபு, அ.நசீர், பி.கே.பொன்னன், மு.மார்க்கபந்து, மல்லிகா அமேசன், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டபிள்யூ.எம்.ராகவன், வி . எஸ் முரளி , எ .முகமதுஅலி பேரூர் செயலாளர்கள் எஸ். நாகராஜன் ஜி .ஜனார்த்தனன் , என் .ஆர். சீனிவாசன், பாஸ் என்ற நரசிம்மன், சி. பெரியசாமி, கே.பி.ஜே தாமோதரன், பி.கே. பாபு, சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் இசட். அப்துல்லா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சென்னை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு

**சென்னை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றி வரும் த.இளையஅருணா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக ஆர்.டி.சேகர்,** எம்.எல்.ஏ.,(82/பி முதல் பிரதான சாலை, திருவள்ளுவர் நகர், கொடுங்கையூர், சென்னை-118) **அவர்கள் சென்னை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.**

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 27.2.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### முத்தமிழறிஞர் கலைஞரின் இளமைக்கால நண்பர்

# வெங்கிடங்கால் சந்தானம் துணைவியார் திருமதி நீலாவதி அம்மையார் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, பிப். 28-

முத்தமிழறிஞர்கலைஞர்அவர்களின்இளமைக்கால நண்பர் - வெங்கிடங்கால் சந்தானம் அவர்களின் துணைவியார்திருமதிநீலாவதிஅம்மையார்மறைவுற்ற செய்தியறிந்ததும்

“கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

‘முத்தமிழறிஞர்தலைவர்கலைஞரின்இளமைக்கால நண்பரும், கீழ்வேளூர் ஒன்றியக் கழக முன்னாள் செயலாளரும், கீழ்வேளூர் ஒன்றிய முன்னாள் பெருந்தலைவருமான வெங்கிடங்கால் சந்தானம் அவர்களின் துணைவியார் திருமதி. ச.நீலாவதி அம்மையார் அவர்கள் மறைவுற்றார் என்பதை அறிந்து மிகுந்த வேதனையடைந்தேன்.

திருமதி. ச. நீலாவதி அம்மையார் அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.’

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

**பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றி வரும் குன்னம் இராஜேந்திரன் அவர்கள், தனது உடல்நலக்குறைவு காரணமாக, தான் வகித்து வரும் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற வீ. ஜெகதீசன்** (நெய்குப்பை மெயின் ரோடு, வேப்பந்தட்டை & அஞ்சல், பெரம்பலூர் மாவட்டம்) **அவர்கள் பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.**

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 27.2.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர், ஒன்றிய, மாநகர, பகுதிச் செயலாளர்கள், பூத் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் BLA2களுக்கான ”இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்” திண்ணைப் பிரச்சாரம் நடத்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ. மகேஷ் தலைமையில் நடைபெற்றது.



முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான் அறிவுறுத்தலின்படி மாநகர தி.மு.க. சார்பில் “இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்” திண்ணைப் பிரச்சாரம் நெல்லை பகுதிச் செயலாளர் நமச்சிவாயம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன்,நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார் ஆகியோர் பங்கேற்று பேட்டை பகுதி வார்டுகள் 16,23,24,25,26,27,ஆகிய 6 வார்டில் திண்ணைப் பிரச்சாரம் மேற்கொண்டனர். நிகழ்வில் துணை மேயர் ராஜ், வட்டச் செயலாளர்கள் குமரேசன், மாரிமுத்து, லெனின், அருள், ஆனந்த பெருமாள், மாமன்ற உறுப்பினர்கள் உலகநாதன், ராமகிருஷ்ணன், கிட்டு, ரவீந்தர், மாணவரணி விசுவநாதன் உள்பட மாநகர கழக, பகுதி கழக, வட்டக் கழக, நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், பாக முகவர்கள், கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர். இந்த திண்ணைப் பிரச்சாரம் பொதுமக்கள் மத்தியில் மிகப் பெரிய அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

# கழகத் தலைவரின் பிறந்தநாளை மக்களுக்குப் பயனுள்ள வகையில் கொண்டாடுங்கள்!

## இளைஞர் அணி அமைப்பாளர்கள் கூட்டத்தில் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தல்!

சென்னை, பிப்.28-

**சென்னை அன்பகம் அண்ணா மன்றத்தில், மாவட்ட – மாநகர – மாநில இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் நடைபெற்றது.**

**கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை, மக்களுக்குப் பயனுள்ள வகையில் கொண்டாடுவது – ‘இல்லந்தோறும் இளைஞர் அணி’ உறுப்பினர் சேர்க்கையை இன்னும் வேகத்துடன் முன்னெடுப்பது, 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கு இளைஞர் அணியினர் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.**

இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சரும் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ஆற்றிய உரை வருமாறு:

“இந்த ஆலோசனைக் கூட்டத்தின் மூலம் மீண்டும் உங்களையெல்லாம் சந்திப்பதில் கூடுதல் மகிழ்ச்சி. நம் கழகத் தலைவர் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் – பேரறிஞர் அண்ணா ஆகியோரின் நினைவிடங்களை இன்று (நேற்று முன்தினம்) மாலை திறந்து வைக்க இருக்கிறார். அண்ணாவின் நினைவிடம் புதுப்பிக்கப் பட்டு, கலைஞர் நினைவிடம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. நான் இரண்டு தினங்களுக்கு முன்பே பார்த்துவந்தேன். நினைவிடங்கள் மிக அருமையாக அமைக்கப்பட்டுள்ளன. நீங்கள் அத்தனைப்பேரும் இந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு, அந்த நிகழ்ச்சியிலும் நிச்சயம் கலந்துகொள்ள வேண்டும்.

இளைஞர் அணி மாநாட்டின் வெற்றிக்காக ஏற்கனவே, நம் குறிஞ்சி இல்லத்தில் உங்களையெல்லாம் சந்தித்து என் அன்பையும், வாழ்த்துகளையும் நாம் அத்தனைப் பேரும் பரிமாறிக் கொண்டோம்.

சென்ற வாரம், இளைஞர் அணியின் மாநாட்டிற்காக உழைத்த, துணை நின்ற தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், பல்வேறு அணிகளின் தலைவர்கள், செயலாளர்களையெல்லாம், அழைத்து அவர்களுக்கும் இளைஞர் அணியின் சார்பாக நன்றி தெரிவிக்கின்ற நிகழ்ச்சியை நடத்திக் காட்டினோம்.

### அடுத்தடுத்த பணிகள்

இந்தக் கூட்டம் ஏன் நடத்தப்படுகின்றது என்ற நோக்கம் உங்களுக்குத் தெரியும். மூன்று நோக்கங்கள். இளைஞர் அணிக்கு அடுத்தடுத்த பணிகள் காத்திருக்கின்றன. இளைஞர் அணி அடுத்து என்ன செய்யப் போகின்றோம் என்பதுதான் எல்லோருடைய எதிர்பார்ப்பும். எல்லோரும் மாநாடு எப்படி நடத்தப்போகிறோம் என்று எதிர்ப்பாத்துக் கொண்டிருந்தார்கள். மாநாட்டை மிகச் சிறப்பான மாநாடாக, எழுச்சி மாநாடாக நடத்திக் காட்டி விட்டோம்.

எந்த ஒரு சின்ன ஒரு தவறான செய்தியோ, மற்ற எதிர் கட்சிகளெல்லாம் எதிர்பார்த்திருந்தன. எந்தவிதமான தவறும் இல்லாமல் மிகச்சிறப்பான ஒரு எழுச்சி மாநாடாக, கொள்கை மாநாடாக நடத்தி முடித்துக் காட்டி இருக்கிறோம்.

### முதன்மையான அணி

கலைஞர் அவர்கள் எப்போழுதுமே சொல்வார். இருக்கின்ற அணிகளிலேயே முதன்மையான அணி இளைஞர் அணிதான் என்று கலைஞர் சொல்லுவார். நம்முடைய தலைவரும் பலமுறை பாராட்டியிருக்கிறார். அதை நாம் செய்து காட்டியிருக்கிறோம்.

நம் கழகத்தினர் மட்டுமில்லாமல் எதிர்க்கட்சியினர்கூட இப்போது கழக இளைஞர் அணி அடுத்து என்ன செய்யப் போகிறார்கள், என்ன தீர்மானம் நிறைவேற்றப் போகிறார்கள், அடுத்த என்ன விஷயத்தைக் கையில் எடுக்கப் போகிறார்கள் என்று அனைவரும் நம்மைத்தான் கூர்ந்து கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

அந்த அளவுக்கு நம் இளைஞர் அணிக்கு இவ்வளவு சிறப்பு சேர்ந்திருக்கிறது. அதற்குக் காரணம் இளைஞர் அணி தம்பிமார்கள் உங்களின் உழைப்புதான். அந்த அளவுக்கு நாம் சிறப்பாக சேலத்தில் இளைஞர் அணி மாநாட்டை நடத்தி முடித்திருக்கிறோம்.

நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் பற்றி நம் மாநாட்டில் நான் சொன்னது போல நான் இப்போது செயலாளராக இருந்தாலும், இந்த இளைஞர் அணிக்கு எப்பொழுதுமே நிரந்தரச் செயலாளர் என்றால், பிராண்ட் அம்பாசிடர் என்றால், அது நம் தலைவர் அவர்கள் தான். அவரின் பிறந்தநாள் வருகின்ற மார்ச் 1-ஆம் தேதி நடைபெற இருக்கின்றது. அந்தப் பிறந்தநாளை மக்கள் பயன்படும் வகையில் கொண்டாட வேண்டும், என்பதை என்னுடைய கோரிக்கையாக நான் உங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

நம் கழகத் தலைவரின் பிறந்தநாள் மார்ச் 1-ஆம் தேதி `இளைஞர் எழுச்சி நாளாக' 2013- ஆம் ஆண்டிலிருந்து கொண்டாடி வருகின்றோம். அதேபோல இந்த முறையும் இளைஞர் எழுச்சி நாள் என்ற பெயரில் தலைவருடைய பிறந்த நாளைக் கொண்டாட வேண்டும், என்று கேட்டுக் கொள்கின்றேன்.

மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில், நலத்திட்ட உதவிகள். உங்களால் எந்த அளவு முடியுமோ, அந்த அளவு செய்திடுங்கள் இதற்கு இலக்கெல்லாம் கிடையாது. உங்களின் வசதிக்கு ஏற்ப மாவட்டச் செயலாளர்களிடம் பேசிவிட்டு, அதை நீங்கள் நடத்துங்கள். சிறியதாக இருந்தாலும்கூட அதைச் சிறப்பாகச் செய்யுங்கள்.

இரண்டாவது இளைஞர் அணியின் அமைப்பை இன்னும் பலப்படுத்த, இல்லந்தோறும் இளைஞர் அணி பணிகளை மேற்கொள்வது, மூன்றாவதுதான் முக்கியமானது அதுதான் நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் அது உங்களுக்கே தெரியும். இந்த மூன்று பணிகளையும் நாம் திறம்பட செய்து முடித்திட வேண்டும். அதற்காகத்தான் இங்கு இந்த ஆலோசனைக் கூட்டத்தை நாம் கூட்டி இருக்கின்றோம்.

கழகத் தலைவர் அவர்களுடைய பிறந்த நாள் என்பது கழகத்தில் உழைக்கின்ற ஒவ்வொரு கடைக்கோடி தொண்டனுக்கும் ஒரு திருநாள் என்று சொல்கின்ற அளவுக்கு மிக முக்கியமான ஒரு நாள். எனவே, ஏழை, எளிய தொண்டர்களுக்குப் பொதுமக்களுக்கு உங்களால் இயன்ற உதவிகளைச் செய்யுங்கள். தலைவரின் மூன்றாண்டு கால ஆட்சியில் தமிழ்நாடு அரசு செய்துள்ள சாதனைகளை, மக்களிடம் நினைவுபடுத்திக் கொண்டே இருங்கள். நான் எல்லா கூட்டங்களிலும் இதைத்தான் திருப்பி, திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், ஒரு ஐந்தே ஐந்து சாதனைகள் மட்டும் மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள்.

### ஐந்து திட்டங்கள்

உங்களுக்குக் கிடைக்கின்ற வாய்ப்புகளில் நம்முடைய அரசை யாராவது விமர்சனம் செய்தார்கள் என்றால், பொது மக்களைச் சந்திக்கும் போதெல்லாம், அவர்களிடம் உரையாடும் போதெல்லாம் இந்த ஐந்து திட்டங்களை மட்டும் விளக்கிக் கூறுங்கள்.

முதல் திட்டம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம். ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் இந்தத் திட்டத்தின் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் வாங்குகிறார்கள். ஒரு சில இடங்களில் தகுதியான சிலருக்கு கிடைக்கவில்லை என்ற புகார்கள் இருக்கின்றன. அதையும் சரி செய்கின்ற பணிகளில் நாங்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். விண்ணப்பித்தவர்களே ஒரு கோடியே அறுபது லட்சம் பேர்தான். அதில் ஒரு கோடியே 16 லட்சம் பேர் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் பெறுகிறார்கள்.

மகளிருக்கு கட்டணம் இல்லா பேருந்து வசதி. ஒவ்வொரு மகளிரும் இந்தக் கட்டணமில்லா பேருந்து வசதித் திட்டம் மூலமாக ஒவ்வொரு மகளிரும்



மாதம் 850 ரூபாய் சேமிக்கிறார்கள். கிட்டத்தட்ட வருடத்திற்கு 12 ஆயிரம் ரூபாய் சேமிக்கிறார்கள். இதுவரைக்கும் மகளிர் இந்த இரண்டரை வருடத்தில் எத்தனை பயணங்கள் மேற்கொண்டு இருக்கிறார்கள் தெரியுமா? இந்தத் திட்டத்தின் மூலம் 455 கோடி முறை மகளிர் பயணம் செய்திருக்கிறார்கள்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். அரசுப் பள்ளியில் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக் கூடிய 17 லட்சம் மாணவர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள். இந்தத் திட்டத்தை இப்போது விரிவாக்கம் செய்வதற்கும் அரசு திட்டங்களை அறிவித்திருக்கிறது.

பக்கத்து மாநிலங்களான தெலங்கானா, ஆந்திராவில் இருந்து வந்து பார்த்துவிட்டு, எப்படி இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறீர்கள் என விசாரித்து அறிந்து, இந்தத் திட்டத்தை அவர்களின் மாநிலத்திற்கு எடுத்துச் செல்கின்றார்கள். இதுதான் திராவிட மாடல் அரசு. அனைத்து மாநிலங்களுக்கும் ஒரு வழிகாட்டியாக நம்முடைய அரசு இருக்கிறது.

மகளிர் கட்டணம் இல்லா பேருந்துத் திட்டம் கர்நாடகாவில் இப்போது கொண்டு வந்து விட்டார்கள். நாம் நிறைவேற்றிக் காட்டினோம். அதன்பிறகு அந்தத் திட்டத்தை அவர்களின் மாநிலத்திற்கும் எடுத்துச் சென்றுள்ளார்கள்.

அரசு பள்ளியில் படித்துவிட்டு, பெண்கள் மேற்படிப்பு படிக்க வேண்டும் என்று புதுமைப்பெண் திட்டம் கொண்டு வந்துள்ளோம். பெண்கள், வீட்டை விட்டு வெளியே வரவேண்டும். பெண்கள், ஆண்களுக்குச் சமம், என்பதற்காகத்தான் இந்தத் திட்டம். இதுவரைக்கும் அரசுப் பள்ளியில் படித்து எந்தக் கல்லூரியில், தனியார் கல்லூரியில் சேர்ந்தாலும் பரவாயில்லை ஒவ்வொரு மாதமும், மாதம் ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு ஊக்கத் தொகை. இதுவரைக்கும் இரண்டு லட்சத்து 72 ஆயிரம் மாணவிகள் உயர் கல்வி படிக்க, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கி இருக்கிறோம்.

இப்போது இந்தத் திட்டத்தை நம் தலைவர்கள் அவர்கள் `தமிழ்ப்புதல்வன்' என்ற பெயரில் மாணவர்களுக்கும் அறிமுகப்படுத்த இருக்கிறார்கள். அரசுப் பள்ளியில் படித்து கல்லூரி படிக்கச் சென்றால், அவர்களுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் கொடுக்கப் போகிறோம்.

அடுத்து நான் முதல்வன் திட்டம். பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது எந்தக் கல்லூரியில் படிக்கலாம்? எந்தக் கோர்ஸ் எடுக்கலாம், என்று அவர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டியாகவும், கல்லூரியில் படிக்கும் போது அடுத்து என்ன வேலைக்குப் போகலாம் அவர்களுக்கான வேலை வாய்ப்புகள் என்ன என்பதைக் கொடுப்பதுதான் நான் முதல்வன் திட்டம்.

அந்தத் திட்டத்தில் இதுவரைக்கும் இரண்டு லட்சம் பேர் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். இதையெல்லாம் தலைவர் பிறந்தநாளையொட்டி நடத்தப்படுகின்ற நிகழ்ச்சிகளில் மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும்.

### தெருமுனைக் கூட்டங்கள்

சேலம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை மக்களிடம் கொண்டு செல்லும் வகையில், ஏற்கெனவே தீர்மான விளக்கத் தெருமுனைக் கூட்டங்களை நடத்தச் சொல்லியிருந்தோம்.

தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டும் தெருமுனைக் கூட்டங்களை நாம் நடத்த வேண்டும். பெரும் செலவு செய்து, இக்கூட்டங்களை நடத்த வேண்டிய அவசியமில்லை. பிரம்மாண்டமான ஏற்பாடுகள் செய்ய வேண்டாம். ஃபிளெக்ஸ், பேனர், பட்டாசு இவற்றையெல்லாம் தவிர்த்துவிடுங்கள்.

தெருமுனைக் கூட்டங்களுக்கு ஒரு மைக், 50 நாற்காலிகள், உங்கள் பகுதியில் இருக்கக்கூடிய ஒரு பேச்சாளர் போதுமானது. உங்களுடைய சக்திக்கு மீறி செலவு செய்து, கூட்டங்கள் நடத்த வேண்டும் என்று நான் சொல்ல இல்லை. தலைவரின் பிறந்தநாளை மக்களுக்குப் பயன்படும் வகையில், ஆடம்பரம் இல்லாமல், மிக எளிமையாக ஏற்பாடு செய்யுங்கள்.

`இல்லம்தோறும் இளைஞர் அணி' உறுப்பினர் சேர்க்கைப் பணியை குறிப்பிட்ட சில மாவட்டங்களைத் தவிர, பல மாவட்டங்களில் நாம் வேகப்படுத்தியாக வேண்டும். காலையிலோ அல்லது மாலையிலோ ஒரு மணி நேரம் வீடு வீடாகச் சென்று இந்த “இல்லந்தோறும் இளைஞர் அணி” பணிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

சென்னை மேற்கு மாவட்ட அமைப்பாளர் பிரகாஷ், சிறப்பான முறையில் இல்லந்தோறும் இளைஞர் அணி முன்னெடுப்பை மேற்கொண்டு, அவர்களுக்கான அடையாள அட்டையையும் கொடுத்திருக்கிறோம். இதை ஒரு எடுத்துக்காட்டாக வைத்துக் கொண்டு மற்ற மாவட்டங்களிலும் இப்பணியைத் தொடரவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். மற்ற மாவட்டங்களில் நீங்கள் சேர்த்த இளைஞர் அணி உறுப்பினர்களுக்கான அடையாள அட்டையை அன்பகத்திலிருந்து கேட்டு வாங்கி, அதை உரியவர்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

நீங்கள் அனுப்பிய உறுப்பினர்களை அன்பகத்தில் ஒரு குழு மூலம் சரிபார்ப்பது போல, அடையாள அட்டைகளும் முறையாகப் போய்ச் சேர்ந்ததா என்று அன்பத்திலிருந்து சரிபார்ப்பார்கள்.

### நமது டார்கெட்

இல்லம் தோறும் இளைஞர் அணிக்கு இலக்கு கிடையாது. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொரு வீட்டுப் படிக்கட்டையும் நாம் ஏறி இறங்க வேண்டும். அது தான் நமது டார்கெட். தகுதியான இளைஞர்களை அணிக்குக் கொண்டு வர வேண்டும்.

ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள் நியமனம் விரைவில் மேற்கொள்ளப்படும். மண்டல வாரியாக ரிவ்யூ மீட்டிங் (ஆய்வுக்கூட்டம்) வைத்திருந்தோம். இரண்டு நாட்களில் முடித்து விடலாம் என்று முடிவு செய்தோம். ஆனால், இரண்டு மண்டலங்கள் மட்டும்தான் முடிக்க முடிந்தது. இப்போது தேர்தல் பணிகள் ஆரம்பித்து விட்டன. இடையில் எப்போது நேரம் கிடைக்கிறதோ, அப்பொழுது அந்தப் பணிகளையும் தொடரப்போகிறோம். இந்த ஒரு வருடத்தில் நீங்கள் ஆற்றியிருக்கக்கூடிய பணிகள் அனைத்தும் அந்த கூட்டத்தில் ஆய்வு செய்யப்படும்.

அடுத்து நமக்கு முக்கியமானது நாடாளுமன்றத் தேர்தல் பணிகள். இந்தத் தேர்தல் எவ்வளவு முக்கியமான தேர்தல் என்று உங்களுக்கே தெரியும். மாநிலங்கள், தேர்தல்கள், மாநில உரிமைகள் எல்லாம் இருக்க வேண்டுமா? வேண்டாமா? என்று முடிவு செய்யக்கூடிய ஒரு மிக முக்கியமான தேர்தல்.

பாசிஸ்டுகள் இன்னொரு முறை வெற்றிபெற்றால், மாநிலங்களே இருக்காது. ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே உடை, ஒரே மொழி இப்படி அனைத்தையும் ஒன்றாகக் கொண்டு வர முயற்சிக்கிறார்கள் பாசிஸ்டுகள். இதை உடைத்து எறிய வேண்டும் என்றால், மீண்டும் பாரதிய ஜனதா ஆட்சி அமையக் கூடாது. நம் தலைவர் யாரைச் சொல்கிறாரோ, அவர்தான் அடுத்த பிரதமராக அமர வேண்டும். அதற்கு நாம் தமிழ்நாடு புதுச்சேரி சேர்த்து, 40க்கு 40 தொகுதிகளிலும் வெற்றி பெற்றாக வேண்டும்.

நான் தொடர்ந்து பல மாவட்டங்களுக்குச் செல்கின்றேன். சென்ற மாதம் அறிவாலயத்தில் ஒருங்கிணைப்புக் குழு சார்பாக கூட்டம் நடத்தி அனைத்து நாடாளுமன்ற நிர்வாகிகளையும் அழைத்துப் பேசியிருக்கிறோம். அவர்கள் கொடுக்கக்கூடிய அந்த வரவேற்பு, எழுச்சி, ஃபீட்பேக் (பின்னூட்டம்) பார்க்கும்போது, திராவிட முன்னேற்றக் கழகம் நாற்பதுக்கு நாற்பது தொகுதிகளில், வெற்றி பெறப்போவது உறுதி.

மாநிலத்தில் கடுமையான நிதிப் பற்றாக்குறை நிலவும் சூழல் உங்களுக்குத் தெரியும். ஆனால், அந்த நிதிப் பற்றாக்குறையிலும் நம் மக்களுக்கு என்ன தேவையோ, அதை நம் தலைவர் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் பெய்த சென்னை, தூத்துக்குடி, நெல்லை மழைக்கு நிவாரணத் தொகையை அரசு சார்பாகக் கொடுத்திருக்கிறோம். ஒன்றிய அரசிடம் இருந்து இதுவரை ஒரு பைசா கூட வரவில்லை. இதையெல்லாம் மக்களிடம் கொண்டு சேருங்கள், பேசிக்கொண்டே இருங்கள்.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்கு போதிய நிதியை ஒதுக்காமல் இருப்பதால் நியாயமான கோரிக்கைகளைக் கூட நம்முடைய அரசு செய்து கொடுப்பதில் சிறிது தாமதம் ஆகின்றது. தமிழ்நாடு என்றாலே ஒரு மாற்றான் தாய் மனப்பான்மையோடுதான் ஒன்றிய அரசு நடத்துகின்றது.

நாம் ஐந்து வருடத்தில் ஆறரை லட்சம் கோடி ரூபாய் வரியாகக் கட்டியிருக்கிறோம். ஆனால் நம் மாநிலத்திற்கு ஒன்றிய அரசு வெறும் ஒன்றரை லட்சம் கோடி ரூபாய்தான் திருப்பிக் கொடுத்திருக்கிறது. நாம் 1 ரூபாய் வரியாகக் கட்டினால் வெறும் 28 பைசாதான் திருப்பித் தருகிறார்கள். மூன்றரை லட்சம் கோடி வரி கட்டிய உத்தரப் பிரதேச மாநிலத்திற்கு 9 லட்சம் கோடி ரூபாய் திருப்பி கொடுக்கப்பட்டிருக்கிறது.

### ஒன்றிய அரசு செய்த துரோகங்கள்

இதனால்தான் நியாயமான கோரிக்கைகளை கூட நிறைவேற்ற முடியாத சூழல் நிலவுகிறது. இந்தச் சூழலை மாற்ற வேண்டும் என்றால் வருகின்ற தேர்தல் மிக மிக முக்கியமான தேர்தல். பத்தாண்டு காலம் ஒன்றிய அரசு செய்த துரோகங்களையும், அதற்குத் துணை போன அ.தி.மு.க-வினரையும் மக்கள் மன்றத்தில் நாம் அம்பலப்படுத்தியாக வேண்டும். ஏற்கெனவே, உரிமைகளை மீட்க தமிழ்நாடு முழுக்க ஒவ்வொரு நாடாளுமன்ற தொகுதியிலும் பிரச்சாரப் பொதுக்கூட்டங்கள் மாநாடு போல நடத்தப்பட்டிருக்கின்றன.

இப்பொழுது இல்லந்தோறும் தலைவரின் குரல் என்ற பிரச்சாரத்தைத் தொடங்க தலைமைக் கழகம் அறிவுறுத்தியுள்ளது. இதையும் சிறப்பாக செய்ய வேண்டும். இளைஞர் அணியினர் உங்களின் பகுதியில் உள்ள மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள், தொகுதிப் பார்வையாளர்கள், பாக நிர்வாகிகளுடன் இணைந்து தேர்தல் பணிகளை செய்ய வேண்டும்.

### இரண்டரை கோடி வாக்குகள்

தமிழ்நாட்டில் மொத்தம் 6 கோடி வாக்காளர்கள் இருக்கிறார்கள். இளைஞர் அணியில் மொத்தம் 25 லட்சம் பேர் உறுப்பினராக இருக்கிறார்கள். நிர்வாகிகள் மட்டுமே 3 லட்சம் பேர் இருக்கிறார்கள். ஓர் இளைஞர் அணி உறுப்பினரின் பங்கிற்கு அவரின் உறவினர், நண்பர்கள் எனக் குறைந்தது 10 வாக்குகளை உறுதி செய்தாலே, இரண்டரை கோடி வாக்குகள் நமக்கு கிடைத்துவிடும். அதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

எனவே, மிகுந்த திட்டமிடலுடன் உழையுங்கள். என்ன சந்தேகம் இருந்தாலும், என்ன வேண்டுமானாலும் எங்களிடம் தெரிவியுங்கள். அதற்கான தீர்வை நாங்கள் ஏற்படுத்தித் தருகின்றோம். 2021ஆம் ஆண்டு அடிமைகளை விரட்டி நம் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டிற்கே ஒரு விடியலைத் தந்தார்கள். இப்போது 2024 ஆம் ஆண்டில் அடிமைகளின் எஜமானர்களையும் வீட்டிற்கு அனுப்ப வேண்டும். அதற்கான தேர்தல்தான் வருகின்ற 2024 நாடாளுமன்றத் தேர்தல். எனவே, பாசிஸ்டுகளை வீழ்த்த, இந்தியாவை வெல்லச் செய்ய ஒற்றுமையுடன் உழைப்போம்.

இன்னொரு மகிழ்ச்சியான செய்தி. சேலம் மாநாட்டிற்கு மாவட்ட செயலாளர்கள், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட கழகச் செயலாளர்கள் என அனைவரும் நிதி கொடுத்திருந்தீர்கள். 78 கோடியே 43 லட்சத்து 71 ஆயிரத்து 764 ரூபாய் இளைஞர் அணியின் வளர்ச்சி நிதியாக வந்திருக்கிறது. இதில் இன்னும் மாநாட்டின் செலவைக் கழிக்கவில்லை. செய்யப்பட்ட செலவு கணக்குகள் பார்த்து வருகிறோம். இன்னும் நான்கு ஐந்து நாட்களில் எவ்வளவு செலவு செய்திருக்கிறோம் என்பதைப் பார்த்துவிட்டு, அந்தக் கணக்குகளையும் உங்களிடத்தில் கூறுவேன்.

### நாடாளுமன்றத் தேர்தல் – எந்தெந்த தொகுதிகள்?

நாடாளுமன்றத் தேர்தல் தொகுதிப் பங்கீட்டை எல்லோரும் கவனித்துக் கொண்டிருப்பீர்கள். ஒவ்வொரு இயக்கமாகத் தொகுதி பங்கீடு முழுந்து கொண்டிருக்கிறது. இந்திய யூனியன் முஸ்லிம் லீக், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சிக்கு தொகுதிப் பங்கீடு செய்யப்பட்டுவிட்டது.

ஒரு இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு தலைவருடன் ஒரு ஆலோசனைக் கூட்டம் நடந்தது. நாடாளுமன்றத் தேர்தலுக்கு எந்தெந்த தொகுதிகளை நாம் வைத்துக்கொள்ளலாம், யாருக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்று ஆலோசிக்கப்பட்டது. தனியார் நிறுவனங்கள் மற்றும் சில சர்வேக்களை பார்க்கும்போது, சில இடங்களில் இங்கு இருப்பவர்களின் பெயரும் அதில் வந்திருக்கிறது. அது எனக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

காங்கிரஸ் பேரியக்கத்துடன் கூட்டணிப் பேச்சுவார்த்தை இன்னும் போய்க் கொண்டிருக்கிறது. சட்டமன்ற தேர்தலின்போது, எப்படி என்னால் முழுந்த அளவிற்கு இளைஞர் அணிக்கு வாய்ப்பை பெற்றுக் கொடுத்தேனோ, அதேமாதிரி இந்த முறையும் என்னால் முழுந்த அளவிற்கு வாய்ப்பு பெற்றுத் தருவேன். வாய்ப்பு கிடைக்கவில்லை என்றால், தளர்ந்துவிட வேண்டாம். நம் உழைப்பு இன்னும் அதிகமாக இருக்க வேண்டும்.

### சட்டமன்றத் தேர்தல் வெற்றிக்கு ஓர் அச்சாரம்

இந்த நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி அடுத்து வர இருக்கின்ற சட்டமன்றத் தேர்தல் வெற்றிக்கு ஓர் அச்சாரமாக இருக்கவேண்டும். சென்றமுறை நாடாளுமன்றத் தேர்தலில் வாங்கிய வாக்குகளை விட இம்முறை குறைந்தால் இதை எதிர் அணியினர் வேறுமாதிரி பிரச்சாரம் செய்வார்கள். ` எனவே அந்த விமர்சனங்களுக்கு இடம் கொடுக்காத வகையில், நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும். அடுத்து வருகின்ற சட்டமன்றத் தேர்தலிலும் உங்களில் பலர் சட்டமன்ற வேட்பாளராக அறிவிக்கப்பட்டு, உறுப்பினர் ஆவதற்கான வாய்ப்பும் இருக்கிறது என்பதை நீங்கள் மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும்.”

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாநில துணைச் செயலாளர்கள் ஜோயல், இன்பா ரகு, இளையராஜா, அப்துல் மாலிக், பிரகாஷ், பிரபு, சீனிவாசன், ஜி.பி.ராஜா, ஆனந்தகுமார், மாவட்ட அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினர்களுமான அண்ணாதுரை, தனுஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரப்பன், எபினேசர், பிரபாகர்ராஜா, சம்பத் உட்பட அமைப்பாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

---

மார்ச் – 1 திராவிட மாடல் அரசின் நல்லாட்சி நாயகர் கழகத் தலைவர்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் பிறந்தநாள் விழா!

### மதுரை மாநகர் மாவட்ட கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கை!

*மதுரை, பிப். 28-*

*மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*திராவிட மாடல் அரசின் நல்லாட்சி நாயகர் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் பிறந்தநாள் விழாவை சிறப்பான முறையில் கொண்டாடும் வகையில் “இல்லந்தோறும் ஸ்டாலி*



*னின் குரல்” திராவிட மாடல் அரசின் சாதனைகளையும், அறிக்கையையும் விளக்கும் வகையில் திண்ணை பிரச்சாரங்கள், பொதுக்கூட்டங்களை நடத்தி, பகுதி கழக, வட்ட கழக, ஒன்றிய பேரூர் கிளைகள் தோறும் நமது இரு வண்ண கொடிகள் ஏற்றி ஒலி பெருக்கி அமைத்து, மரக்கன்றுகள் நட்டும், இனிப்புகள் வழங்கியும், மாபெரும் மருத்துவ முகாம்கள், அன்னதானங்கள் வழங்கியும், முதியோர் இல்லங்கள் காப்பகங்களில் அறுசுவை உணவு வழங்கியும், அந்த இல்லங்களுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கியும், ஏழை எளிய சாமானியர்கள் பயன்படுகின்ற வகையில் நலத்திட்ட உதவிகளை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்ட கழக, ஒன்றிய, பேரூர், கிளை செயலாளர்கள், நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

---

தி.அ.முகமது சகி பங்பகேற்பு!கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமையில்

## வேலூர் சட்டமன்ற தொகுதி கூட்டம்!

### ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*வேலூர், பிப். 28-*

*வேலூர் சட்டமன்ற தொகுதி சார்பில் பகுதி நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் பாக முகவர்கள் மற்றும் பாக உறுப்பினர்கள் கூட்டம் இன்று (28.2.2024) மாலை 5 மணியளவில் வேலூர் பேபி மஹால் திருமண மண்டபத்தில் மாநகர கழக செயலாளரும் வேலூர் சட்டமன்ற உறுப்பினருமான ப. கார்த்திகேயன் தலைமையில் நடைபெறுகிறது.*

*இதில் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி, தொகுதி மேற்பார்வையாளர் ஒசூர் விஜயகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.*

*எனவே தொகுதிக்குட்பட்ட மாநகர கழக நிர்வாகிகள், மாநில அணிகளின் நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள்,*



*தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.*

*பொருள்: 1. முதல்வர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா 2. நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் 3. இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல் பரப்புரை 4. கழக ஆக்கப் பணிகள்*

*மேற்கண்டவாறு மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.*

# புது வீட்டில் குடியேறினார் கலைஞர்!

**பி**ப்ரவரி 26 - புது வீட்டில் கலைஞர் குடியேறி இருக்கிறார். 'மகன்' கட்டித் தந்துள்ளார். சாதாரண மகன், தன் தந்தைக்கு கட்டி எழுப்புவது வரலாறு ஆவதில்லை. தலைவராகவும் முதலமைச்சராகவும் ஆனபிறகு மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் கட்டி எழுப்பி இருப்பதுதான் பெரும் வரலாறு.

தர மறுக்கப்பட்ட நிலத்தை - சட்டப் போராட்டம் நடத்தி வென்று - அத்தோடு மக்கள் மனதையும் வென்று ஆட்சியைப் பிடித்து - தலைவர் என்ற முழுத்தகுதியும் - முதலமைச்சர் என்ற முழுமுதல் தகுதியையும் பெற்ற பிறகு இது அமைந்திருக்கிறது.

எல்லாவற்றையும் பெரிதினும் பெரிதாக கற்பனை செய்து வைத்திருப்பார் கலைஞர். 133 அடிக்கு திருவள்ளுவருக்கு சிலை வை, வள்ளுவர் கோட்டத்தில் 128 உயரத்துக்கு தேர் வை... என்பதெல்லாம் கலைஞருக்கு மட்டுமே வாய்க்கும் கற்பனைகள். அவரது கற்பனைக்கும் எட்டாதது தான் இந்த நினைவகம். 95 ஆண்டு வாழ்க்கையை ஒரு சுற்று வட்டப் பாதைக்குள் தொழில்நுட்ப உதவியோடு அடக்கிக் காட்டி விட்டார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

கோபாலபுரத்துக் கோமான், கடற்கரையில் தமிழர்களின் கலங்கரை விளக்காக ஒளி வீசத் தொடங்கி இருக்கிறார்.

**கோபாலபுரம் வீடு - தமிழ் அவையாய் இருந்தது.**

**முரசொலி - அவரது ஞான சபையால் காட்சியளித்தது.**

**அறிவாலயம் - உடன்பிறப்பின் உணர்ச்சி அவையாய் மிளிர்ந்தது.**

**சென்னை கோட்டை - தமிழ்நாட்டின் மக்கள் அவையாய் காட்சி அளித்தது. நான்கிலும் கோலோச்சினார் கலைஞர்.**

இந்த நான்கையும் ஒன்றாய் பார்க்க நினைப்பவர்கள் கடற்கரைக்கு வாருங்கள். கலைஞர் நினைவகம் இந் நான்கின் மொத்த அவையாக இருக்கிறது.



கலைஞர் எப்போதும் தனி உயிரல்ல. அரசியல்வாதி - இலக்கியவாதி (இலக்கியத்தில் எல்லா வகையும் உண்டு!) - திரையுலக கர்த்தா - பெருங்கவிஞர் - பாடலாசிரியர் - நாடக ஆசிரியர் - நாடக நடிகர் - பேச்சாளர் - பத்திரிகை ஆசிரியர் - கார்ட்டூனிஸ்ட் - என எல்லாம் கலந்த கலவை அவர். சிலை செதுக்கும் சிற்பிக்கும் உளிவழி காட்டவும் செய்வார். இசை வாசிக்கும் கலைஞருக்கும் ரிதம்பதம் சுட்டவும் செய்வார். எல்லாம் அறிந்தவரை ஒரு குடைக்குள் அடக்குதல் கடினம்.

**எட்டரை ஏக்கர் பரப்பில் எழிலார்ந்த வனப்பில் எல்லாவற்றையும் உள்ளடக்கி , பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு உருவாக்கத்தில் நினைவகம் மிளிர்கிறது. கலைஞர் மீது மாறா அன்பும், கட்டடக் கலை அறிவும் கொண்டவராக பொதுப் பணித்துறை அமைச்சர் இருப்பதால்தான் இது சாத்தியம் ஆனது.**

உள்ளே என்னவெல்லாம் இருக்கிறது தெரியுமா?

பேரறிஞர் அண்ணா சதுக்கம், அண்ணா சிலை, அண்ணா அருங்காட்சியகம், முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம், கலைஞர் சிலை, தமிழ்ச் செம்மொழியாக வழங்கப் பட்டபோது சோனியா அம்மையார் கலைஞருக்கு எழுதிய கடிதம் கல் வெட்டு வடிவில், கலைஞரின் வாழ்க்கை காட்சிகள் கொண்ட புகைப்படங்களின் குவியல், இந்தியாவின் அனைத்து முதல மைச்சர்களுக்கும் கொடியேற்றும் உரிமை பெற்றுத் தந்த முழக்கக் காட்சிகள், கோபாலபுரம் கலைஞர் அறையில் அவரோடு நின்று புகைப்படம் எடுத்துக் கொள்ளலாம், அவரோடு அமர்ந்து உரையாடலாம், அவர் எழுதிய புத்தகங்களின் தலைப்பை தொட்டால் அந்த புத்தகம் பற்றி கலைஞரின் குரலில் அறியலாம், கலைஞரின் புதிர் போட்டியில் கலந்து கொண்டு அதில் வென்றால் கலைஞர் குரலில் பாராட்டைப் பெறலாம், மகளிர் திட்டங்களின் காட்சிகள், காமிக்ஸ் புதிர் வடிவில் கலைஞரின் வரலாறு, மண்சாலைகளை தார்ச்சாலைகள் ஆக்கியதும், குடிசைகளை கோபுரங்களாக கட்டியதுமான மாற்றங்கள்,

ப.திருமாவேலன்

நவீன தமிழ்நாட்டை அவர் எப்படி கட்டி எழுப்பினார் என்பதற்கான காட்சிகள், கலையுலகிலும் அரசியலிலும் அவர் வெற்றிக் கொடி நாட்டிய வரலாற்றைச் சொல்லும் 20 நிமிட காட்சிப் படம்... இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

உங்களுக்காக ஒரு புகைவண்டி காத்திருக்கிறது. திருவாரூரில் ஏற்றி சென்னைக்கு கொண்டு வந்து இறக்கி விடும். த்ரிடி காட்சிகளில் கல்லக்குடியில் அவர் தண்டவாளத்தில் தலை வைத்து படுத்தது முதல் ஒவ்வொரு நகரங்களிலும் அவர் உருவாக்கிய கட்டமைப்புகள் வரை பார்த்தபடியே வலம் வரலாம். தட தட அதிர்வுகளோடு முழுக்கலைஞரையும் அறியலாம்.

**குறைந்தது இரண்டு மணி நேரம் தேவைப்படும் 'மு.க' என்ற இரண்டெழுத்தை அறிய!**

**நினைவகம் திறக்கப்படுவது போல இல்லை, 'உணர்வகம்' திறக்கப்பட்டதைப் போலவே இருக்கிறது.**

**'இந்தியாவின் இரண்டாவது பெரிய கடற்கரையில் அமைந்துள்ள முதல் அதிசயம் இது'** என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருப்பது முழு உண்மை!

**'ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இங்கே உறங்குகிறான் என்று எனது கல்லறையில் எழுதவேண்டும் என்பதற்காகவே தவம் இருக்கிறேன்' - என்றார் கலைஞர்.**

**ஓய்வெடுக்காமல் உழைத்த தலைவர், இப்போதும் உறங்கவில்லை. உழைத்துக் கொண்டுதான் இருக்கிறார். உழைப்பு என்பது செயல்படுவது மட்டுமா? இல்லை, செயல்பட வைப்பதும் உழைப்புத்தான்!**

**தன்னில் இருந்து உருவான தலைவனை உழைக்க வைத்து உழைத்துக் கொண்டுதான் இருக்கிறார் கலைஞர்!**

'ஒருவன் எத்தனை ஆண்டு காலம் வாழ்ந்தான் என்பதை அவனது மரணத்துக்குப் பிறகு கணக்கிட வேண்டும்' என்றவரும் அவர்தான். 2018 ஆகஸ்ட் 7 க்குப் பிறகு கலைஞரின் பிறப்பு கணக்கிடப்படுகிறது. ஐந்து வயதுப் பிள்ளை. திருவாரூரின் முல்லை. இன்று தமிழ்நாட்டின் எல்லையாக தலைநகரில் எழுந்து நிற்கிறார் கலைஞர்.

அரசியலில் அவர் சூடான உதயசூரியன்.

கலையுலகில் குளிர்ச்சிமிகு சந்திரன்.

சூரியனும் சந்திரரும் கடலோரத்தில் ஒருசேரக் காணக் கிடைத்த கருவூலமே கலைஞர் நினைவகம்.

**அது இனி கலைஞர் திடல்! கலைஞர் கடல்!**




கூட்டுறவுத் துறையின் மூலம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வழங்கப்பட்டு வரும்

# தானிய ஈட்டுக் கடன் உச்சவரம்பு ரூ.25 இலட்சமாக உயர்வு!

## கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!



சென்னை, பிப். 28-

கூட்டுறவுத்துறையின் மூலம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வழங்கப்பட்டு வரும் தானிய ஈட்டுக் கடன் உச்ச வரம்பு ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது என கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் பொது மக்களும், விவசாயிகளும் பயன்பெறும் வகையில் பல்வேறு வகைக் கடன்கள் வழங்கப்பட்டு வருகி றது. அதிக எண்ணிக்கையில் பயனாளிகள் பயன்பெறும் வகையில் கூட்டுறவு நிறு வனங்கள் மூலம் வழங்கப்படும் அனைத்து வகை கடன்களுக்கும் 2023-/24ஆம் ஆண்டிற்கான குறியீட்டினை அதிகரித்து மறு நிர்ணயம் செய்து வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகள், தங்களது மாவட்டங்களில் விளை பொருட்களை சேமித்து வைத்து, நல்ல விலை கிடைக்கும்போது விற்று பயன்பெறும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன் படி, சொந்த கிடங்கு வசதி இல்லாத சிறு மற்றும் குறு விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களுக்கு சொந்தமான கிடங்கு களைப் பயன்படுத்தி, தானியங்களை பாதுகாப்பாக இருப்பு வைத்துக் கொள்ளலாம். மேலும், உடனடி நிதி தேவைக்காக, தானியங்களுக்கு ஈடாக தானிய ஈட்டுக் கடனும் பெறும் நடைமுறையும் வழக்கத்தில் உள்ளது. தானியங்களின் சந்தை மதிப்பில், 75% வரை, 10% முதல் 11.75% வட்டியில் கடன் பெறலாம். இந்த தொகையை ஓராண்டு தவணையில், ஒரே நேரத்திலோ, மொத்தமாகவோ அல்லது பகுதியாகவோ திருப்பிச் செலுத்தலாம்.

தமிழ்நாட்டில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் 5,47,800 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 4,047 கிடங்குகளைக் கொண்டுள்ளது. அவற்றில் 1,164 கிடங்குகள் ஏற்கனவே கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணை யத்தின் அங்கீகாரம் பெற்று பதிவு செய்யப்பட்டுள்ளன.

இக்கடன், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 2023-2024 ஆம் ஆண்டில் 31.01.2024 வரை ரூ.202.98 கோடி அளவிற்கு 4791 விவசாயிகள் கடன் பெற்று பயனடைந்துள்ளனர்.

அதன்படி, சில மத்தியக் கூட்டுறவு வங்கிகள், விவசாயிகள் அதிகம் பயன்பெறும் வகையில் தானிய ஈட்டுக்கடனின் உச்ச வரம்பினை உயர்த்திட கோரிக்கை வைத்தனர். அவர்களின் கோரிக்கையினை ஏற்று இக்கடன் குறியீட்டினை ஏய்த ஏதுவாகவும், பயனாளிகள் அதிக அளவில் பயனடையும் வகையிலும் தானிய ஈட்டுக் கடன் உச்ச வரம்பு ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சமாக உயர்த்தி வழங்க அனுமதி அளிக்கப் பட்டுள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் நபார்டு அறிவுரைகளைப் பின்பற்றி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தானிய ஈட்டுக்கடன் வழங்குதல் தொடர்பாக ஏற்கனவே தெரிவிக் கப்பட்டுள்ள நடைமுறைகளையும் பின்பற்றுமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலும், இது தொடர்பாக உரிய துணை விதித்திருத் தங்கள் / ஒழுங்குமுறை விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, விவசாயிகள் தங்கள் விளைவிக்கும் நெல், மணிலா, மஞ்சள், சாமை, தினை உள்ளிட்ட தானியங்களை கூட்டுறவு சங்கங்களுக்கு சொந்தமான கிடங்குகளில் சேமித்து வைத்து, தானிய ஈட்டுக்கடன் பெறலாம். அதிக விலை கிடைக்கும் போது, தானியங்களை விற்பனை செய்து பயன்பெறலாம்.

இவ்வாறு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.



கோவை மாநகர் மாவட்டம், சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அனைத்து கழக நிர்வாகிகள் அனைத்து பூத் கமிட்டி பொறுப்பாளர்கள்,BLA2 , பூத் கமிட்டி உறுப்பினர்கள், அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் கூட்டம், பீளமேடு பாலன் நகர் கண்டியப்பன் சமூக கூடத்தில், மாவட்டக் கழக செயலாளர் நா.கார்த்திக் ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கழக மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர், சிங்காநல்லூர் தொகுதி தேர்தல் பார்வையாளர் மணிசுந்தர் முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில், கழக சொத்துப் பாதுகாப்பு குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில்,பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன், கழக மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் நா.முருகவேல் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.







மாண்புமிகு
கழகத் தலைவர்
வாழிய! வாழியவே!!
மார்ச் 1
பிறந்த நாள்
திருத்தணி எஸ்.சந்திரன் B.A., LLB., MLA.,
திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச்செயலாளர்
திருத்தணி சட்டமன்ற உறுப்பினர்
என்றும் தங்கள் வழியில்
Dr.VCR.குமரன் BAMS.,
மாவட்ட கழக துணை செயலாளர்
திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.
SS Digital
96 299 326 49



நாள் : 28.02.2024 காலை 9.30 மணி / இடம் : தூத்துக்குடி, துறைமுகம்.




தலைவர் கலைஞர் அவர்கள் முன்வைத்த

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

வலியுறுத்திய

**“குலசேகரபட்டினம் ராக்கெட் ஏவுதளம்”**

அமைப்பதற்கு அடிக்கல் நாட்டிட

தூத்துக்குடி துறைமுகத்திற்கு வருகை தரும்

**மாண்புமிகு இந்திய பிரதமர்**

திரு. **நரேந்திர மோடி** அவர்களையும்



நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்து திட்டம் நிறைவேற

தொடர்ந்து வலியுறுத்தி பெற்றுத் தந்த தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர்

**கனிமொழி கருணாநிதி** எம்.பி. அவர்களையும்



மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்

திரு. **எ.வ.வேலு** அவர்களையும்

*வருக! வருக! என அன்புடன் வரவேற்கிறேன்*

**அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்**

செயலாளர் – தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க.

மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்


கலைஞர் 100
1924 - 2023
♦ போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகத்தின்
புதிய அலுவலகக் கட்டிடம் திறப்பு விழா
♦ சென்னை, திருச்சி மற்றும் விழுப்புரம் பணிமனைகளை நவீனமயமாக்குதல் மற்றும்
மேம்படுத்துதல் திட்ட துவக்க விழா மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம்
தேர்வான தானியங்கி பொறியாளர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள்
ஆகியோருக்கு பணி நியமன ஆணை வழங்குதல்
♦ மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னை 50 புதிய பேருந்துகள் இயக்கம் மற்றும்
மாநகர் போக்குவரத்துக் கழகம் மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு
பாரத ஸ்டேட் வங்கியின் (S.B.I.) மின்னணு பயணச்சீட்டு இயந்திரம் (E.T.M) வழங்கும்
விழாவிற்கு வருகைதரும்...
மாண்புமிகு விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாநில இளைஞரணி செயலாளர்
உயர்திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களே
வருக! வருக!!
நாள்: 28.02.2024
இடம்: போக்குவரத்து ஆணையரகம், கிண்டி, சென்னை.
அன்புடன்... சா.சி.சிவசங்கர்
மாவட்ட கழக செயலாளர் - அரியலூர் மாவட்டம்
போக்குவரத்துத் துறை அமைச்சர் - தமிழ்நாடு அரசு

எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ., - என்.கிருஷ்ணமூர்த்தி பங்கேற்பு!

# பெரம்பலூர் மாவட்டம் கொளத்தூர் ஜல்லிக்கட்டு போட்டி!

## அமைச்சர் சா.சி. சிவசங்கர் துவக்கி வைத்தார்!


பெரம்பலூர், பிப். 28-

பெரம்பலூர் மாவட்டம், கொளக்காநத்தம் அருகே உள்ள குளத்தூர் கிராமத்தில் ஜல்லிக்கட்டு பேரவையின் சார்பில், இந்த ஆண்டுக்கான ஜல்லிக்கட்டு போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் துவங்கிய ஜல்லிக்கட்டுப் போட்டியை தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் கற்பகம் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். அரசு விதிமுறைகளின் படி நடைபெறும் இந்த ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் 500க்கும் மேற்பட்ட காளைகள்பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், 200க்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்களும் தங்களது பெயர்களை பதிவு செய்திருந்தனர். முறையான மருத்துவ பரிசோதனைக்கு பிறகு ஜல்லிக்கட்டு காளைகளும், மாடுபிடி வீரர்களும் களத்தில் அனுமதிக்கப்பட்டனர். இந்த ஜல்லிக்கட்டு போட்டியில் வெற்றி பெறும் வீரர்களுக்கும், காளைகளின் உரிமையாளருக்கும், தங்க காசுகள், சைக்கிள், பாத்திரங்கள், பிளாஸ்டிக் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு விதமான பரிசுகள் வழங்கப்பட்டன. இது வரையில் 10க்கும் மேற்பட்டவர்கள் லேசான காயமடைந்து சிகிச்சை பெற்றனர். இவர்களில் மூன்று பேர் அரியலூர் அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இப்போட்டியில் பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, திருச்சி மற்றும் ஆத்தூர், சேலம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து திரளான வீரர்கள் கலந்து கொண்டனர். இதில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், ஆலத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் என்.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.ஆர்.சிவசங்கர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்**

**ப. பழனிவேல்**
**பிப்ரவரி 28 (2022)**



தனது இளமைப் பருவத்திலேயே கழக உறுப்பினராகி பணியாற்றி வந்தவர்.

ஒன்றுபட்ட நாகை மாவட்ட விவசாய அணி அமைப்பாளராக பொறுப்பு வகித்தவர்.

மூன்று முறை வடவூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும், இரண்டுமுறை ஒன்றியக்குழு உறுப்பினராகவும், நாகை மாவட்ட ஒன்றிய பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

ரிஷிவந்தியம் தொகுதியில் - கடந்த 10 ஆண்டுகளாக நடக்காத

# வளர்ச்சிப் பணிகள் கடந்த 3 ஆண்டுகளில் நடைபெற்றுள்ளது!

## வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பேச்சு!

கள்ளக்குறிச்சி, பிப். 28-

ரிஷிவந்தியம் தொகுதியில் கடந்த பத்தாண்டுகளாக நடக்காத வளர்ச்சித் திட்ட பணிகள் கடந்த மூன்று ஆண்டுகளில் திராவிட மாடல் ஆட்சியில் நடந்துள்ளது என்று வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் கார்த்திகேயன் திருக்கோவிலூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் புதிய கட்டிடம் ரூபாய் மூன்று கோடியே 90 லட்சம் மதிப்பீட்டில் திறந்து வைத்தார்,மேலும் மணலூர் பேட்டையில் அரசு மருத்துவமனை கட்ட ரூபாய் ஒரு கோடியே 20 லட்சம் மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது, அதனைத் தொடர்ந்து ரிஷிவந்தியத்தில் கலைஞர் நூற்றாண்டு நினைவு விழாவை முன்னிட்டு பயணியர் நிழற்குடையை ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

தொடர்ந்து வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பேசுகையில்:-

கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் வளர்ச்சிக்கு தமிழக முதலமைச்சர்,கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறார், மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சரான எ.வ.வேலு அதிக முக்கி யத்துவம் கொடுத்து வருவதால் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அதிக அளவில் வளர்ச்சித் திட்ட பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது, பொது மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது,மக்களை தேடி மனுக்கள் பெறும் முகாமில் பெறப்பட்ட மனுக்களில் 90 சதவீத மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் உடனுக்குடன் வழங்கியதில் மாநில அளவில் கள்ளக்குறிச்சி மாவட்டம் சரித்திர சாதனை படைத்து வருகிறது, மாவட்டத்தில் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் பெறாதவர்களே இல்லை என்ற நிலை உள்ளது.

ஒவ்வொரு ஊராட்சியிலும் சுமார் 20 ஆண்டுகளில் நடைபெற வேண்டிய பணிகள் கடந்த மூன்று ஆண்டுகளில் நடைபெற்று இருக்கிறது என்பதை பொதுமக்கள் நன்கு அறிவார்கள், தொகுதி முழுவதும் கணக்கில் எடுத்துக் கொண்டால் கடந்த 10 ஆண்டுகளில் அ.தி.மு.க. ஆட்சியில் நடக்காத பணிகள் தற்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற இந்த திராவிட மாடல் ஆட்சியில் மூன்று ஆண்டுகளில் ரிஷிவந்தியம் தொகுதியில் வளர்ச்சித் திட்ட பணிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் பெற்றதில் முதன்மை தொகுதியாக விளங்கி வருகிறது.

எனவே மாநில அரசு நேரடியாகவும் பல்வேறு துறையின் மூலமாகவும் செயல்படுத்திய திட்டங்கள் குறித்து மக்களிடத்தில் எடுத்துக் கூறி வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் கள்ளக்குறிச்சி தொகுதியில் கட்சி தலைமை அறிவிக்கும் தி.மு.க. அல்லது கூட்டணி கட்சி வேட்பாளரை குறைந்தபட்சம் 3 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய அனைவரும் கடுமையாக பணியாற்ற வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர் பேசினார்.

மேலும் இந்த நிகழ்வில் மாவட்ட ஊராட்சிக் குழு துணை தலைவர் தங்கம், ஒன்றிய பெருந்தலைவர்கள் அஞ்சலாட்சி அரசகுமார், வடிவுக்கரசி சாமி சுப்பிரமணியன், துணைத் தலைவர்கள் தனம் சக்திவேல், சென்னம்மாள் அண்ணாதுரை,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜ், கண்ணன், ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன், அய்யனார், கிருஷ்ணமூர்த்தி, பெருமாள், துரைமுருகன், பாரதிதாசன், ராஜவேல், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் கோவிந்தராஜ், ஜெய்சங்கர், பேரூராட்சி மன்றத் தலைவர் ரேவதி ஜெய்கணேஷ், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் பாலாஜி பூபதி, அறங்காவலர் குழு உறுப்பினர் ராஜீவ் காந்தி, அரசு ஒப்பந்ததாரர் தமிழரசன், மாவட்ட இளைஞரணி உதயா, ஒன்றிய துணைச் செயலாளர்கள் தணிகாசலம், முருகன் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர்கள் துணைத் தலைவர்கள், அரசு அதிகாரிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பொதுமக்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழக தி.மு.க. நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டக் கழக அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டளை மையத்தை (வார் ரூம்) கழக சட்டத்துறை செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான என்.ஆர்.இளங்கோ திறந்து வைத்தார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் எம்.எல்.ஏ., தலைமைக் கழக வழக்கறிஞர் செய்தி தொடர்பாளர் சூர்யாவெற்றிக்கொண்டான், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பிரபாகரன், அரசு வழக்கறிஞர் இராம.சோயோன் மற்றும் பலர் உள்ளனர்.


இரண்டாம் ஆண்டு

**நினைவு அஞ்சலி**

வடவூர். **ப.பழனிவேல்** அவர்கள்

நாகை முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர்


நினைவு நாள் : 28.02.2024

தோற்றம் : 02.09.1940 | மறைவு : 28.02.2022

நீங்கள் காட்டிய
**தலைவரின் பாதையில்**
என்றும்
நாங்கள் பயணிப்போம் !

*என்றும் உங்கள் நினைவில்*

**வடவூர். க.ராஜேந்திரன்**
ஒன்றிய கழக செயலாளர்
தலைமை செயற்குழு உறுப்பினர்,



DHARUN Digital 9842028805

**நாகை தெற்கு ஒன்றிய தி.மு.க**



மதுரையில் தி.மு.க. பொறியாளர் அணி சார்பில், கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பேச்சுப்போட்டி, கலைத்திருவிழா நடைபெற்றது. பேச்சுப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு அமைச்சர் பி.மூர்த்தி, அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் ஆகியோர் பரிசுகள் வழங்கினர். உடன் மாவட்டச் செயலாளர்கள் மு.மணிமாறன், கோ.தளபதி, மாநில செயலாளர் எஸ்.கே.பி.கருணா துரை, கி.சரவணன், வே.உமாகாந்த், ச.பிரதீப் ஆகியோர் உள்ளனர்.

# சைதையில் பாகமுகவர்கள் கூட்டம்!

சென்னை, பிப்.28–

சைதை கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் இரா. துரைராஜ் ஏற்பாட்டில் நடைபெற்ற பாக ஒருங்கிணைப்பாளர்கள் பாக முகவர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், தொகுதி மேலிடப் பார்வையாளர் கோ.வி.லெனின் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர். இதில் மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன். மா.அன்பரசன், தா.மோகன்குமார் உள்ளிட்ட சைதை கிழக்கு பகுதியில் உள்ள பாக ஒருங்கிணைப்பாளர்கள், சைதை சம்பத் மின்னல் கந்தப்பன் இ.முருகேசன் ஆர்.ராஜ்குமார் மு. ஆரோக்கியம் ஆர்.அருணகிரி மு.பாக்கியலட்சுமி எஸ் . ராதாகிருஷ்ணன் டி.வி.நரசிம்மன் ஜி.செல்வராஜ் க.உமாபதி ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## திருச்சி தெற்கு மாவட்டத்தில்

# நாடாளுமன்றத் தேர்தலுக்கு பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களுக்கு தேர்தல் பார்வையாளர்கள் நியமனம்!



## மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு !

திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட, பகுதி ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் பகுதி ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களுடன் மற்றும் தொகுதி பார்வையாளர்களுடன் இணைந்து வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் தேர்தல் பணியாற்றிட கீழ்க் கண்ட பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களுக்கு தேர்தல் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றார்கள்.

**திருச்சி கிழக்கு தொகுதி பார்வையாளர் ஈரோடு பிரகாஷ்**

| வ.எண் | பகுதி செயலாளர்கள் | பார்வையாளர்கள் |
|---|---|---|
| 1. | மருந்துக்கடை ஆர். மோகன்<br>மலைக்கோட்டை பகுதிகழக செயலாளர் | B.A. நூர்கான்<br>மாநகர அவைத்தலைவர் |
| 2. | ஆர்.ஜி.பாபு<br>மார்க்கெட் பகுதி கழக செயலாளர் | ஆறு.சந்திரமோகன்<br>மாநகர துணை செயலாளர் |
| 3. | டி.பி.எஸ்.எஸ்.ராஜ் முகம்மது<br>பாலக்கரை பகுதி கழக செயலாளர் | பொன்.செல்லையா<br>மாநகர துணை செயலாளர் |
| 4. | ஜி.மணிவேல்<br>கலைஞர் நகர் பகுதி கழக செயலாளர் | எம். தமிழ்ச் செல்வம்<br>மாநகர பொருளாளர் |
| 5. | ஏ.எம்.ஜி.விஜயகுமார்<br>அரியமங்கலம் பகுதி செயலாளர் | உ.ராஜேஸ்வரன்,<br>பொதுக்குழு உறுப்பினர் |

**திருவெறும்பூர் தொகுதி பார்வையாளர் சீ.க. மறைமலை**

| வ.எண் | பகுதி.ஒன்றிய.நகர, பேரூர் செயலாளர்கள் | பார்வையாளர்கள் |
|---|---|---|
| 1. | இ.எம்.தர்மராஜ்<br>பொன்மலைப் பகுதி செயலாளர் | கே.ஏ.வி. தினகரன்<br>மாவட்டவழக்கறிஞர் அணி அமைப்பாளர் |
| 2. | ஓ.நீலமேகம்<br>காட்டூர் பகுதி செயலாளர் | என். செந்தமிழ்ச் செல்வன்<br>மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் |
| 3. | எஸ்.சிவக்குமார்<br>திருவெறும்பூர் பகுதி செயலாளர் | அ.த.த.செங்குட்டுவன்<br>மாவட்ட துணை செயலாளர் |
| | கே.எஸ்.எம். கருணாநிதி | பி. கிருஷ்ண கோபால் |
| 4. | திருவெறும்பூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் | மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் |
| 5. | சி. கங்காதரன்<br>திருவெறும்பூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் | இரா.மூக்கன்<br>மாவட்ட துணை செயலாளர் |
| 6. | இ. காயாம்பு<br>துவாக்குடி நகர கழக செயலாளர் | எஸ். அடைக்கல ராஜா<br>மாவட்ட அயலக அணி அமைப்பாளர் |
| 7. | எம்.ஆர்.டி.பி.கே. தங்கவேல்<br>கூத்தைப்பார் பேரூர் கழக செயலாளர் | ஏ. ஜெகதீசன்<br>மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர் |

**மணப்பாறை தொகுதி பார்வையாளர் கே.என். சேகரன்**

| வ.எண் | பகுதி,ஒன்றிய,நகர, பேரூர் செயலாளர்கள் | பார்வையாளர்கள் |
|---|---|---|
| 1. | சி. ராமசாமி<br>மணப்பாறை ஒன்றிய கழக செயலாளர் | இரா.குணசேகரன்<br>மாவட்ட பொருளாளர் |
| 2. | சி. செல்வராஜ்<br>மருங்காபுரி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் | என். கோவிந்தராஜன்,<br>மாவட்ட அவைத் தலைவர் |
| 3. | சி. சின்ன அடைக்கண்<br>மருங்காபுரி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் | கொட்டப்பட்டு ஜி.ரமேஷ்<br>விவசாய அணி அமைப்பாளர் |
| 4. | எம். பழனியாண்டி<br>மருங்காபுரி மத்திய ஒன்றிய கழக செயலாளர் | பி.எம். சபியுல்லா<br>தலைமைச் செயற்குழு உறுப்பினர் |
| 5. | ஆர். ஸ்ரீரங்கன்<br>வையம்பட்டி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் | செ. பன்னீர்செல்வம்<br>பொதுக்குழு உறுப்பினர் |
| 6. | வி.ஏ. ராஜேந்திரன்<br>வையம்பட்டி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் | எம்.சி. சிவக்குமார்<br>மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் |
| 7. | மு.ம.செல்வம்<br>மணப்பாறை நகர கழக செயலாளர் | பி. அருள் சுந்தர்ராஜன்<br>மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் |
| 8. | கே.ஏ.நாகராஜ்<br>பொன்னம்பட்டி பேரூர் கழக செயலாளர் | டால்பின் ஏ. ஜான் சாலமன்<br>மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் |

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்,
மாவட்டக் கழகச் செயலாளர்,
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

## ஈரோடு வடக்கு மாவட்டத்தில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா - நல உதவிகள் வழங்கல்!

## மாவட்டச் செயலாளர் என். நல்லசிவம் அறிக்கை!



ஈரோடு, பிப். 28-

மாவட்டக் கழக செயலாளர் என்.நல்லசிவம் அறிக்கை வருமாறு:-

01.03.2024 வெள்ளிக்கிழமை அன்று கழகத்தலைவர் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் கழக கொடியேற்றுதல் மற்றும் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது.

எனவே இந்த நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர், வார்டு, கிளைக்கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள், கழகத்தோழர்கள் அனைவரும் அந்தந்த பகுதிகளில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு : இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைப்படி மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கீரனூரில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆனையின்படி இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல், கழக அரசின் சாதனைகளை இல்லம்தோறும் எடுத்துச் செல்லும் பணியினை மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன் தொடங்கி வைத்தார், நிகழ்வில் மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கே. ஆர்.என்.போஸ், மாவட்ட கழக துணைச் செயலாளர் வழக்கறிஞர் எஸ்.எஸ். கருப்பையா, ஒன்றிய கழக செயலாளர்கள் ஆர்.ஆர். சாமிநாதன், ஆர்.ஆர்.எஸ் மாரிமுத்து, கீரனூர் பேரூர் கழக செயலாளர் வழக்கறிஞர் அண்ணாதுரை, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை தலைவர் ஜெ.அசரப் அலி, பேரூராட்சி தலைவர் கே.எம்.கே.ரவிக்குமார், துணைத் தலைவர் எம்.ஏ. எம்.இம்தியாஸ், மாவட்ட பிரதிநிதிகள் வி எஸ் பழனி, கண்ணன், யு.எம்.கிருஷ்ணமூர்த்தி, வினோலியா உள்ளிட்ட கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# கலைஞர் நகரில் துண்டுப் பிரசுரம் வழங்கல்!

சென்னை, பிப். 28–

இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல் பிரச்சாரம் குறித்து கழகதலைவர் ஆணைப்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் ஆலோசனைபடி, கலைஞர் நகர் தெற்கு. வடக்கு பாக தலைவர்கள் கூட்டம், பகுதி செயலாளர்கள் கே. கண்ணன், மு.ராசா தலைமையில் நடந்தது. இதில் விருகம்பாக்கம் எ.எம்.பி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ., கணக்குநிலைகுழு தலைவர் க.தனசேகரன் சிறப்புரையாற்ற, தொகுதி பொறுப்பாளர் கன்னிகை ஜி.ஸ்டாலின் ஆலோசனை வழங்கினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஒடுகத்தூர் ஆர். நடராசன்

**பிப்ரவரி 28 (2009)**



கழகம் துவக்கப்பட்ட காலத்திலிருந்து கிளை, பேரூர், ஒன்றியம் ஆகிய அமைப்புகளின் செயலாளராக பொறுப்பேற்று கழகப் பணியாற்றிய இவர். பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் திருமணம் செய்து கொண்டார்.

மூன்று முறை பொதுக்குழு உறுப்பினராகவும், ஒரு முறை மாவட்ட அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

ஒடுக்கத்தூர் பேரூராட்சித் தலைவராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று 14 முறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# ஆர்.கே.நகர் கிழக்கு - மேற்கு பகுதி பாகமுகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

சென்னை பிப்:28

சென்னை வடக்கு மாவட்டம்,ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி மற்றும் மேற்கு பகுதி கழகம் சார்பில் பாக முகவர்கள் பாகப்பணியாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 25.02.2024 ஞாயிற்றுக் கிழமை மாலை தண்டையார்பேட்டை, இளைய தெருவில் உள்ள எஸ்.எஸ்.திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

பகுதி கழக செயலாளர்கள் இரா.லட்சுமணன்,எஸ். ஜெபதாஸ் பாண்டியன், ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் தா.இளையஅருணா தலைமை வகித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், ஆகியோர் முன்னிலையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆலோசனை வழங்கினார்.

இதில் ஆர்.கே.நகர் தொகுதி பொறுப்பாளர் நந்தனம் நம்பிராஜன், பகுதி கழக நிர்வாகிகள் என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, கே.வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார், எம்.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், டி.திராவிடசெல்வி, பி.சீனிவாசன், மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கனேசன், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகராஜ், ப.குமார், சா.தமிழ்ச்செல்வன், பொ.து.ராஜா, கி. தேவன், ஆர்.ஏ. எம்.சசிகுமார், ஜி. ஏழுமலை, எம்.ராஜன் மாமன்ற உறுப்பினர்கள் தேவி கதிரேசன்,குமாரி நாகராஜ், இ.ரவிக்குமார், எம்.எம்.சாமி, ஜெ. சுரேஷ்குமார், வி.முத்து, எஸ்.திருப்பதிசாமி, கே.மோகன், மா. ரூப் சங்கர், தணிகாசலம், தா.வேதாசலம், எஸ். கென்னடி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஏ. டி.மணி, வெ.சு.சத்யநாராயணன், டாக்டர். கலைவாணர், எஸ்.எம். பரசுராமன், சி. மணிகண்டன், இர. பொன்இளவரசன், பி. சதீஷ்குமார், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், பாக முகவர்கள், பாக பணியாளர்கள், சார்பு மன்ற நிர்வாகிகள்,கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## தி.மு.க. நெசவாளர் அணி

# மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு!

தி.மு.க. நெசவாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் நாளை (29-2-2024 - வியாழக்கிழமை) காலை 11.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள்; நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 24.02.2024

**நன்னியூர் இராஜேந்திரன்**
செயலாளர்,
தி.மு.க. நெசவாளர் அணி.




நாகை மாவட்டம் கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி முகவர்கள், பூத் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் திருக்குவளையில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக்ததலைவருமான என்.கௌதமன் பேசினார். உடன் கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் கே.ஆர்.என்.போஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், க.ராஜேந்திரன், இல.மேகநாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், கே.பழனியப்பன், சோ.பா.மலர்வண்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் இல.பழனியப்பன், கோ.சிவக்குமார் மற்றும் பலர் உள்ளனர்.

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க.

சார்பில்

## மார்ச்-1



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# கழகத்தலைவர்

அவர்களின்

71வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

## கழக கொடியேற்றி தெருமுனை பிரச்சாரக்கூட்டங்கள், நலத்திட்ட உதவிகள்

71 கழகத் தலைவர் மற்றும் **விளையாட்டு போட்டிகள் 71 நிகழ்ச்சிகள்**



## மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் K.K.செல்லபாண்டியன் M.Com., BL., அறிவிப்பு

**நிகழ்ச்சி : 1** — 02.03.2024 புதுக்கோட்டை — **புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் புதுக்கோட்டை அரசு இராணியார் மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தல்**

**நிகழ்ச்சி: 2**
நாள் : 01.03.2024,
சாந்தநாதபுரம், கம்பன் நகர் பகுதியில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
புதுக்கோட்டை நகரம்

**நிகழ்ச்சி: 3**
நாள் : 02.03.2024,
மாவட்ட தி.மு.க. & 39வது வட்ட தி.மு.க. சார்பில் அன்னசத்திரத்தில் 1071 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
புதுக்கோட்டை நகரம்

**நிகழ்ச்சி: 4**
நாள் : 03.03.2024,
காமராஜபுரம் , தொண்டைமான் நகர் பகுதிகளில் மரக்கன்று வழங்குதல்
புதுக்கோட்டை நகரம்

**நிகழ்ச்சி: 5**
நாள் : 04.03.2024,
புதுக்கோட்டை அரசு பார்வையற்றோர் பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
புதுக்கோட்டை நகரம்

**நிகழ்ச்சி: 6**
நாள் : 05.03.2024,
புதுக்கோட்டை நேசக்கரம் முதியோர் இல்லத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
புதுக்கோட்டை நகரம்

**நிகழ்ச்சி: 7**
நாள் : 05.03.2024,
வாகவாசல் அரசு மறுவாழ்வு இல்லத்தில் மதிய உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
புதுக்கோட்டை தெற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 8**
நாள் : 05.03.2024,
வாகவாசல் தர்காவில் விவசாய பெருமக்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்குதல்
புதுக்கோட்டை தெற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 9**
நாள் : 07.03.2024,
M.குளவாய்ப்பட்டி ஊராட்சி மாத்தூரில் விவசாய பெருமக்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்குதல்
புதுக்கோட்டை தெற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி:10**
நாள் : 07.03.2024,
கவிநாடு மேற்கு ஊராட்சியில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
புதுக்கோட்டை தெற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 11**
நாள் : 03.03.2024
கணபதிபுரம் ஊராட்சியில் கழக இருவண்ண கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
புதுக்கோட்டை வடக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 12**
நாள் : 03.03.2024
வண்ணாரப்பட்டி ஊராட்சியில் கழக இருவண்ண கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
புதுக்கோட்டை வடக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 13**
நாள் : 05.03.2024
கருப்புடையான்பட்டி ஊராட்சியில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
புதுக்கோட்டை வடக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 14**
நாள் : 05.03.2024
வளவம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல்
புதுக்கோட்டை வடக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 15**
நாள் : 05.03.2024
மழையூர் அரசு மேல் நிலைப் பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல்
கறம்பக்குடி தெற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 16**
நாள் : 07.03.2024
இலைகடிவிடுதி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல்
கறம்பக்குடி தெற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 17**
நாள் : 05.03.2024
பல்லவராயன்பத்தை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல்
கறம்பக்குடி தெற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 18**
நாள் : 03.03.2024
பெரியவாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல்
கறம்பக்குடி தெற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 19**
நாள் : 03.03.2024
கழக இருவண்ண கொடியேற்றி பிலாவிடுதியில் தெருமுனைக் கூட்டம்
கறம்பக்குடி வடக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 20**
நாள் : 03.03.2024
கழக இருவண்ண கொடியேற்றி அம்புகோவிலில் தெருமுனைக் கூட்டம்
கறம்பக்குடி வடக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 21**
நாள் : 03.03.2024
கழக இருவண்ண கொடியேற்றி சுக்கிரன்விடுதியில் தெருமுனைக் கூட்டம்
கறம்பக்குடி வடக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 22**
நாள் : 03.03.2024
கழக இருவண்ண கொடியேற்றி பில்லுவெட்டுவிடுதியில் தெருமுனைக் கூட்டம்
கறம்பக்குடி வடக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 23**
நாள் : 03.03.2024
கழக இருவண்ண கொடியேற்றி வாண்டான்விடுதியில் தெருமுனைக் கூட்டம்
கறம்பக்குடி வடக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 24**
நாள் : 06.03.2024
கழக இருவண்ண கொடியேற்றி தட்டாமனைப்பட்டியில் தெருமுனைக் கூட்டம்
கறம்பக்குடி வடக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 25**
நாள் : 04.03.2024
கறம்பக்குடி TVG திருமண மண்டபத்தில் 3000 நபர்களுக்கு மதிய உணவு வழங்குதல்
கறம்பக்குடி பேரூர்

**நிகழ்ச்சி: 26**
நாள் : 03.03.2024
கந்தர்வக்கோட்டையில் கழக இருவண்ண கொடியேற்றி இனிப்பு வழங்குதல் அதனை தொடர்ந்து அம்பாள் திருமணமண்டபத்தில் 71 ஆண்கள் & 71 பெண்களுக்கு வேட்டி சேலை வழங்கி மதிய உணவு வழங்குதல்
கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 27**
நாள் : 02 & 03.03.2024
ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி சார்பில் மங்களாக்கோவிலில் மாபெரும் கிரிக்கெட் போட்டி
கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 28**
நாள் : 04.03.2024
மாவட்ட நெசவாளர் அணி சார்பில் துவார் அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல்
கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 29**
நாள் : 05.03.2024
ஒன்றிய இளைஞரணி சார்பில் கல்லாக்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல்
கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 30**
நாள் : 06.03.2024
மாவட்ட தொண்டர் அணி சார்பில் வேலாடிப்பட்டி அரசு மேல் நிலை பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல்
கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 31**
நாள் : 07.03.2024
மாவட்ட மகளிர் அணி சார்பில் காட்டுநாவலில் கழக இருவண்ண கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 32**
நாள் : 04.03.2024
அரவம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல்
கந்தர்வக்கோட்டை வடக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 33**
நாள் : 04.03.2024
வடுகப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல்
கந்தர்வக்கோட்டை வடக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 34**
நாள் : 06.03.2024
மங்கனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல்
கந்தர்வக்கோட்டை வடக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 35**
நாள் : 06.03.2024
கோமாபுரம் அரசு உயர் நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல்
கந்தர்வக்கோட்டை வடக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 36**
நாள் : 03.03.2024
கொப்பம்பட்டி ஊராட்சி 500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
குன்றாண்டார்கோவில் கிழக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 37**
நாள் : 05.03.2024
கண்ணங்குடி ஊராட்சியில் 500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
குன்றாண்டார்கோவில் கிழக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 38**
நாள் : 06.03.2024
கிள்ளுக்கோட்டை ஊராட்சியில் 500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் பொதுக்கூட்டம்
குன்றாண்டார்கோவில் கிழக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 39**
நாள் : 07.03.2024
செங்களூர் ஊராட்சி ராசாப்பட்டியில் 500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
குன்றாண்டார்கோவில் கிழக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 40**
நாள் : 02.03.2024
உடையாளிபட்டி ஊராட்சி சத்திரப்பட்டியில் கழக இருவண்ண கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
குன்றாண்டார்கோவில் மத்திய ஒன்றியம்

**நிகழ்ச்சி: 41**
நாள் : 03.03.2024
வத்தனாக்கோட்டை ஊராட்சி குன்றாண்டார்கோவிலில் கழக இருவண்ண கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
குன்றாண்டார்கோவில் மத்திய ஒன்றியம்

**நிகழ்ச்சி: 42**
நாள் : 03.03.2024
நாஞ்சூர் ஊராட்சி நாஞ்சூர் விளக்கு கழக இருவண்ண கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
குன்றாண்டார்கோவில் மத்திய ஒன்றியம்

**நிகழ்ச்சி: 43**
நாள் : 05.03.2024
கீழையூர் ஊராட்சி நாச்சியார்பட்டி , கீழையூர், குளவாய்ப்பட்டி, மலையடிப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல்
குன்றாண்டார்கோவில் மத்திய ஒன்றியம்

**நிகழ்ச்சி: 44**
நாள் : 05.03.2024
வைத்தூர் அரசு உயர் நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல்
குன்றாண்டார்கோவில் மேற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 45**
நாள் : 05.03.2024
உப்பிலியக்குடி அரசு உயர் நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல்
குன்றாண்டார்கோவில் மேற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 46**
நாள் : 07.03.2024
குளத்தூர் அரசு உயர் நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல்
குன்றாண்டார்கோவில் மேற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 47**
நாள் : 06.03.2024
வார்டு 15 ஈச்சங்காட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
கீரனூர் பேரூர்

**நிகழ்ச்சி: 48**
நாள் : 06.03.2024
பரம்பூர் ஊராட்சி தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
அன்னவாசல் தெற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 49**
நாள் : 04.03.2024
வயலோகம் அரசு மேல் நிலைப் பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல்
அன்னவாசல் தெற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 50**
நாள் : 05.03.2024
முக்கணாமலைப்பட்டி ஊராட்சி தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
அன்னவாசல் தெற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 51**
நாள் : 02.03.2024
அன்னவாசல் பேரூராட்சி தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
அன்னவாசல் பேரூர்

**நிகழ்ச்சி: 52**
நாள் : 01.03.2024
விளத்துப்பட்டி ஊராட்சியில் நலிவடைந்தோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
அன்னவாசல் வடக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 53**
நாள் : 03.03.2024
வெள்ளனூர் ஊராட்சி ரெங்கமாள் சத்திரம் நரிக்குறவர் காலனியில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
அன்னவாசல் வடக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 54**
நாள் : 04.03.2024
கீழக்குறிச்சி அரசு மேல் நிலைப் பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல்
அன்னவாசல் வடக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 55**
நாள் : 06.03.2024
இரும்பாளி ஊராட்சியில் நலிவடைந்தோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
அன்னவாசல் வடக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 56**
நாள் : 04.03.2024
கொடிக்கால் தெரு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல்
இலுப்பூர் பேரூர்

**நிகழ்ச்சி: 57**
நாள் : 04.03.2024
நீர்பழனி ஊராட்சி ஒன்றிய தொடக்கபள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் மற்றும் மதிய உணவு வழங்குதல்
விராலிமலை கிழக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 58**
நாள் : 05.03.2024
ஆவூர் புதுப்பட்டி, ஆம்பூர்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கபள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் மற்றும் மதிய உணவு வழங்குதல்
விராலிமலை கிழக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 59**
நாள் : 06.03.2024
ஆலங்குடி ஊராட்சி வேல்ராம்பட்டியில் கழக இருவண்ண கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
விராலிமலை கிழக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 60**
நாள் : 07.03.2024
பாலண்டாம்பட்டி ஊராட்சியில் கழக இருவண்ண கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
விராலிமலை கிழக்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 61**
நாள் : 01.03.2024
விராலிமலை ஊராட்சியில் கழக இருவண்ண கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
விராலிமலை மேற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 62**
நாள் : 03.03.2024
கொடும்பாளூர் ஊராட்சியில் கழக இருவண்ண கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
விராலிமலை மேற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 63**
நாள் : 05.03.2024
ராஜாளிப்பட்டி ஊராட்சியில் கழக இருவண்ண கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
விராலிமலை மேற்கு ஒன்றியம்

**நிகழ்ச்சி: 64**
நாள் : 05.03.2024
சூரியூர் ஊராட்சி ஆலங்குளத்தில் கழக இருவண்ண கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
விராலிமலை மத்திய ஒன்றியம்

**நிகழ்ச்சி: 65**
நாள் : 05.03.2024
கத்தலூர் ஊராட்சி ஆத்துப்பட்டியில் கழக இருவண்ண கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
விராலிமலை மத்திய ஒன்றியம்

**நிகழ்ச்சி: 66**
நாள் : 05.03.2024
வேலூர் ஊராட்சி பூமரத்தில் கழக இருவண்ண கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
விராலிமலை மத்திய ஒன்றியம்

**நிகழ்ச்சி: 67**
நாள் : 05.03.2024
ராஜகிரி ஊராட்சி குளவாய்பட்டியில் கழக இருவண்ண கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குதல்
விராலிமலை மத்திய ஒன்றியம்

**நிகழ்ச்சி: 68**
நாள் : 05.03.2024
புதுக்கோட்டை நேசக்கரம் முதியோர் இல்லத்தில் காலை உணவு வழங்குதல்
மாவட்ட இளைஞர் அணி

**நிகழ்ச்சி: 69**
நாள் : 06.03.2024
நாஞ்சூர் அன்னை தெரசா மனவளர்ச்சி குன்றியோர் பள்ளியில் நலத்திட்ட உதவி வழங்குதல்
மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி

**நிகழ்ச்சி: 70**
நாள் : 03.03.2024
களமாவூர் ரெனேசான்ஸ் மனவளர்ச்சி குன்றியோர் பள்ளி மதிய உணவு வழங்குதல்
மாவட்ட மாணவர் அணி

**நிகழ்ச்சி: 71**
நாள் : 07.03.2024
பிளாசம் சிறப்பு குழந்தைகள் பள்ளி நலத்திட்ட உதவிகள்
மாவட்ட பொறியாளர் அணி

மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் சட்டத்துறை மற்றும் சிறைத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் **எஸ்.ரகுபதி** மற்றும் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் **சிவ.வீ.மெய்யநாதன்** ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் பங்கேற்று சிறப்பிக்கவுள்ளார்கள்.

வழக்கறிஞர் **கே.கே.செல்லபாண்டியன்**
மாவட்டக் கழகச் செயலாளர்
புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க.


மார்ச்-1
INDIA
மாண்புமிகு.
தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத்தலைவர்
அவர்களை வாழ்த்தி வணங்கி மகிழ்கிறோம்.
மாண்புமிகு. S.ரகுபதி B.Sc.,BL.,
சட்டத்துறை அமைச்சர்
மாவட்ட கழகச் செயலாளர்
புதுக்கோட்டை தெற்கு
மாண்புமிகு. சிவ.வீ.மெய்யநாதன் M.C.A, சுற்றுச்சூழல் துறை அமைச்சர்
என்றும் அன்புடன்
வழக்கறிஞர் K.K.செல்லபாண்டியன் M.Com.,BL.,
மாவட்ட கழகச் செயலாளர்
புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க

# திராவிடப் போராளிகள் 56

■ வழக்கறிஞர் அருள்மொழி

**ம**றைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...

## கொள்கையோடு வழிநடத்திய அன்னை!

*1973*-ஆம் ஆண்டு டிசம்பர் 24- ஆம் நாள் தந்தை பெரியார் உடலால் மறைந்தார். உணர்வாகி தமிழரின் உள்ளங்களில் நிறைந்தார். அதன்பின் 06.01.1974 அன்று திருச்சியில் கூடிய திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழு அன்னை மணியம்மையாரை திராவிடர் கழகத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. தலைமைப் பொறுப்பேற்ற பின், அவர் ஆற்றிய முதல் உரையில்,

“புத்தன், இராவணன், இரணியன் போன்றவர்களை எல்லாம் ஒழித்துவிட்டோம் - இந்த இராமசாமி பெரியாரை ஒழிக்க முடியவில்லையே என்று ஏக்கமிட்டுக் கொண்டிருந்த ஆரியம், இன்றைக்கு ஒழிந்தாரே அவர் என்று, நிம்மதி மூச்சுவிடலாம். அந்த நிம்மதியைக் குலைப்பதுதான் நம் இலட்சியம், அதுதான் நமது சேவை.” என்று முழங்கினார். அன்று அவர் உரைத்த சொற்கள் ஒவ்வொன்றையும் தன் வாழ்நாளிலேயே சாதித்து காட்டினார்.

### விலகாதப் பாதை

கழகத் தலைவரானபின், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆக வகைச் செய்யவேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி, சென்னை தலைமை அஞ்சலகம் முன்னால், 03.04.1974 அன்று மறியல் கிளர்ச்சியைத் தலைமை தாங்கி நடத்தினார். மீண்டும் 26.05.1974 அன்று சென்னை வந்த மத்திய அமைச்சர் ஒய்.பி.சவானுக்கு கறுப்புக் கொடி காட்டும் போராட்டத்தை நடத்தினார்.

மேற்கூறிய போராட்டங்களை 1974- ஆம் ஆண்டு பிப்ரவரி மாதமே நடத்துவதற்குத் திட்டமிட்ட அன்னை மணியம்மையார், அப்போது கோவை நாடாளுமன்ற இடைத்தேர்தலும் புதுவை மாநில பொதுத்தேர்தலும் நடைபெற இருந்ததால் கலைஞர் அவர்களின் கரத்தை வலுப்படுத்துவதற்காகப் போராட்டத்தைத் தள்ளிவைத்தார். “இன்று நம்மிடையே நம் தலைவர் ஐயா அவர்கள் இருந்தால், இந்த முடிவைத்தான் எடுப்பார்” என்று 07.02.1974 ‘விடுதலை’ ஏட்டின் தலையங்கத்தில் எழுதிய அன்னை மணியம்மையார் அந்தப் பாதையிலிருந்து இறுதி வரை விலகவில்லை.

அதே நேரத்தில், தன் கொள்கைப் பணிகளை நிறைவேற்றுவதில் எந்தச் சமரசத்துக்கும் இடமளிக்காத அன்னை மணியம்மையார், கலைஞர் அவர்கள் முதல்வராக இருக்கும்போது, 1974 -ஆம் ஆண்டு டிசம்பர் 25 அன்று தமிழ்நாட்டில் ‘இராவண லீலா’ என்ற இனமான பெருவிழாவை நடத்தினார். இந்திய விடுதலைக்குப் பின் ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவின் தலைநகரான டெல்லியில் ‘ராம் லீலா’ என்ற பெயரில் இந்தியப் பிரதமர் அம்புவிட இராவணன், கும்பகர்ணன், இந்திரஜித்தன் உருவங்கள் தீப்பற்றி எரியும் காட்சி இப்போதும் நடக்கிறது. அதனை நாட்டின் பிரதமர் முன்னின்று நடத்துவது மிகப்பெரிய கொடுமை என்பதை விளக்கி, பிரதமர் இந்திரா காந்திக்கு தந்தி அனுப்பினார் அன்னை மணியம்மையார். ராம்லீலாவை அரசியல் ஆக்கக் கூடாது என்றும் இராவண லீலா கிளர்ச்சி நடவடிக்கையைக் கைவிட வேண்டும் என்றும் பதில் அனுப்பினார் பிரதமர் இந்திராகாந்தி.

இராவண லீலா நடந்துவிடக் கூடாது என்பதற்காக சென்னை மாநகரக் காவல்துறை எடுத்த நடவடிக்கைகளை எல்லாம் முறியடித்து, சென்னை பெரியார் திடலில் ராமன், லட்சுமணன், சீதை, ஆகியோரின் உருவ பொம்மைகளை எரித்துப் பெரும் எழுச்சியை உருவாக்கிய மணியம்மையார் கைது செய்யப்பட்டார். அன்னையாரோடு சேர்த்து 14 பேர் மீது வழக்குப் பதியப்பட்டது.


ஓவியம் : ரவி பேலட்

தந்தை பெரியார் அவர்கள் உயிருடன் இருந்தபோதே கலைஞர் அவர்களுக்கு சென்னை அண்ணா சாலையில் சிலை வைக்க முடிவுசெய்து, அதற்கான குழுவையும் அமைத்தார். அவர் மறைந்தபின் அன்னை மணியம்மையார் 1975 -ஆம் ஆண்டு செப்டம்பர் 21 அன்று கலைஞர் அவர்களுடைய சிலையை நிறுவினார்.

கலைஞர் அவர்கள் தந்தை பெரியாரின் ஈரோட்டு இல்லத்தைத் தமிழ்நாடு அரசு சார்பாக, நினைவகமாக மாற்றுவதற்கு மணியம்மையாரின் அனுமதியைக் கோரினார். அதற்குரிய மதிப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கும் முன்வந்தார். ஆனால், அன்னை மணியம்மையார் தந்தை பெரியாரின் இல்லத்தை எந்தத் தொகையும் பெறாமலே அரசுக்கு அளித்தார். அத்துடன் தந்தை பெரியார் பிறந்து வாழ்ந்த அந்தப் பெரிய இல்லத்தின் பின் பகுதியில்தான் பேரறிஞர் அண்ணா ‘விடுதலை’ ஏட்டின் நிர்வாக ஆசிரியராகப் பணியாற்றித் தன் குடும்பத்துடன் 1942 -ஆம் ஆண்டு வரை வாழ்ந்தார். எனவே இருவர் பெயரையும் சூட்ட வேண்டும் என அன்னை மணியம்மையார் வேண்டுகோள் வைத்தார். அதனை ஏற்று, 17.09.1975 அன்று முதல்வர் கலைஞர் அவர்கள் ஈரோட்டில் ‘பெரியார்-அண்ணா நினைவகத்தை’ அன்னை மணியம்மையார் தலைமையில் திறந்து வைத்தார்.

### நெருக்கடி நிலை

பெரியார் திடலில் அம்மையாரால் உருவாக்கப்பட்ட ஏழு மாடிக் கட்டடத்தின் வருவாயை முடக்குவதற்காக நெருக்கடி நிலை காலத்தில் பெரியார் திடல் அமைந்துள்ள ஈ.வெ. கி.சம்பத் சாலையில் தண்டோரா போட்டு அந்தக் கட்டடத்தில் எந்த நிகழ்ச்சியும் நடத்தக் கூடாது என்று அறிவித்தார்கள். அதனை எதிர்த்து அன்னை மணியம்மையார் அன்றைய ஆளுநர் சுகாதியா, முன்னாள் முதல்வர் பக்தவத்சலம், அரசு ஆலோசகர் ஆர்.வி.சுப்பிரமணியம், ஒன்றிய உள்துறை அமைச்சர் பிரம்மானந்த ரெட்டி ஆகியோரை சந்தித்து ’எங்கள் கட்டடங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்கவேண்டும்’ என்று கோரிக்கை வைத்தார்.

**ஒரு நூற்றாண்டு கடந்த நீதிக்கட்சி, திராவிட இயக்க வரலாறுகளில் ஏராளமான போராளிகள் வாழ்ந்தார்கள், இன்றும் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்கள் அமைத்த அடித்தளத்தில்தான் இன்றைய பெண்களின் உரிமை வாழ்க்கை அமைந்துள்ளது.**

“நீங்கள் பார்ப்பன எதிர்ப்புக் கொள்கையைக் கைவிட்டுவிட்டோம் என்று ஒரு அறிக்கை கொடுங்கள், உங்கள் கோரிக்கையை நிறைவேற்றுகிறோம், உங்கள் தொண்டர்கள் அனைவரையும் விடுதலை செய்கிறோம்” என்று அவர்கள் கூறியபோது, “அது எங்கள் லட்சியம், நான் உட்பட எங்கள் தொண்டர்கள் அவ்வளவு பேரும் இறந்தாலும் பார்ப்பன எதிர்ப்புக் கொள்கையைக் கைவிடமாட்டேன்” என்று அவர்கள் முகத்துக்கு நேராக அறிவித்தார். சிறைச்சாலையில் இருந்த தோழர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்கள் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி, தேவையான உதவிகளையும் செய்தார்.

மேலும் அன்னையாரின் மன உறுதியைக் குலைப்பதற்காக ‘இராவண லீலா வழக்கு’ அவசர நிலைக் காலத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. 09.09.1976 அன்று மணியம்மையாருக்கும் மற்றும் 11 பேருக்கும் இரண்டு குற்றங்களின் பேரில் ரூபாய் 200, ரூபாய் 500 அபராதம் விதிக்கப்பட்டது. தவறினால், ஆறு மாதம் மற்றும் ஆறு வாரம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. மேல்முறையீட்டில் 25.04.1977 அன்று மாவட்ட (SESSIONS) நீதிமன்றம் அனைவரையும் விடுதலை செய்தது.

மிசா காலகட்டத்தில் அன்னை மணியம்மையார் அவர்கள் தன்னுடன் இருந்த ஒருசில தோழர்களின் துணையோடு கழகத்தையும் தோழர்களையும் காப்பாற்ற நடத்திய போராட்டங்கள் இன்றும் நாம் கற்றுக்கொள்ளவேண்டியப் பாடங்களாகும்.

1977 அக்டோபர் மாதம் தமிழ்நாட்டுக்கு வந்த அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டப்படும் என்று 21.10.1977 அன்று ’விடுதலை’யில் அறிக்கை வெளியிட்டார் அன்னை மணியம்மையார். கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்துக்கு அ.தி.மு.க அரசு தடை விதித்தது. அன்னை மணியம்மையார் தடையை எதிர்த்து களம் புகுந்தார். கைது செய்யப்பட்டார். காவல்துறை அதிகாரி ஒருவர் அப்போராட்டத்தின் போது அன்னையாரை இழிவான சொற்களால் பேசிய கொடுமையும் நடந்தது.

### தன்னலமற்ற வாழ்வு

தனக்கென எதையும் சேர்த்துக் கொள்ளாத அன்னை மணியம்மையாரின் வாழ்க்கைப் பாதுகாப்புக்காக தந்தை பெரியார் அவர்கள் சில சொத்துகளை எழுதிவைத்தார்கள். ஆனால், திராவிடர் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்ற பின் 1974 செப்டம்பர் மாதம் அன்னை மணியம்மையார் தனது பெயரில் இருந்த சொத்துக்களைத் தன் பூர்வீக சொத்து உட்பட ‘பெரியார் மணியம்மை கல்வி அறப்பணிக் கழகம்’ என்ற அறக்கட்டளையாக உருவாக்கினார்.

சென்னை பெரியார் திடலில் ’பெரியார் பகுத்தறிவு நூலகம் - ஆய்வகம்’ என்று ஒரு நூலகத்தை உருவாக்கினார். பெரியார் சுயமரியாதைத் திருமண நிலையம் உருவாக்கி ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான சுயமரியாதை திருமணங்களையும் சாதி மறுப்பு திருமணங்களையும் நடத்துவதற்கு வழி ஏற்படுத்தினார்.

ஒரு கடுமையான அடக்குமுறை காலக்கட்டத்தை எதிர்த்து நின்ற மாபெரும் தலைவர் அன்னை மணியம்மையார், தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழா தொடங்கும் முன் 16.03.1978 அன்று இதய நோயினால் காலமானார்.

தந்தை பெரியார் மறைவுக்குப் பின் அன்னை மணியம்மையார் வாழ்ந்த காலம் 4 ஆண்டுகள் 2 மாதங்கள் 22 நாள்கள். அந்தக் குறுகிய காலத்துக்குள் அன்னை மணியம்மையார் ஆற்றிய அரும்பணிகளும், படைத்த சாதனைகளும் நம் அனைவரையும் வியப்பின் எல்லைக்கே கொண்டு செல்கின்றன.

திராவிடர் இயக்க வரலாற்றில் மட்டுமல்ல உலகில் எந்த ஒரு சமூகப் போராட்ட இயக்கத்தின் வரலாற்றிலும் அன்னை மணியம்மையாரைப் போன்ற நெஞ்சுரமும் அஞ்சாமையும் ஆளுமையும் கொண்ட இன்னொரு தலைவரைப் பார்க்கமுடியாது.

முடிவாக,

ஒரு நூற்றாண்டு கடந்த நீதிக்கட்சி, திராவிட இயக்க வரலாறுகளில் ஏராளமான போராளிகள் வாழ்ந்தார்கள், இன்றும் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்கள் அமைத்த அடித்தளத்தில் தான் இன்றைய பெண்களின் உரிமை வாழ்க்கை அமைந்துள்ளது. அதை அவர்களுக்கு உணர்த்த வேண்டியது நமது கடமை.

(முற்றும்)

---

### மூடர்களின் கூடாரம்!

இந்தியாவின் முதல் பெண் ஆசிரியராகக் கொண்டாடப்படுபவர் சாவித்திரி பாய் பூலே. அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் என சமூகச் சீர்திருத்தம், சமூக நீதிக்காக இயங்கியவர்களுக்கு எல்லாம் முன்னோடியானவர் சாவித்திரி பாய் பூலே அவர்கள். அவரை ‘கல்விக் கடவுள்’ எனக் கூறியதற்காக ஆசிரியை ஒருவரைப் பணி இடைநீக்கம் செய்துள்ளது ராஜஸ்தான் அரசு.

ராஜஸ்தான் மாநிலம், பரான் மாவட்டத்தில் கிஷன்கஞ்ச் என்கிற ஊரில் குடியரசு நாள் கொண்டாட்டத்தின்போது தலைவர்களின் படத்துடன் சரஸ்வதி கடவுள் படம் வைக்கப்பட்டு, கல்வியின் கடவுள் என வணங்க வேண்டும் என கல்வித்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர். ஆனால், ஹேமலதா என்கிற ஆசிரியை, கற்பித்தலில் சரஸ்வதியின் பங்கு இல்லை என்று கூறியதுடன், சாவித்திரி பாய் பூலேதான் உண்மையாக கல்விக் கடவுள் என வாதம் செய்துள்ளார்.

இதையடுத்து, ஆசிரியர் ஹேமலதா மீது துறை ரீதியான விசாரணை நடத்தப்பட்டு, அந்த மாநிலக் கல்வி அமைச்சரின் உத்தரவின் பேரில், பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். பாரதிய ஜனதா கட்சி ஆட்சியாளர்கள் பகுத்தறிவுக்கு ஒவ்வாத செயல்களால் மக்களிடம் அம்பலப்பட்டு வருகின்றனர். அது கீழ்மட்டம் தொடங்கி, பிரதமர் வரை நீள்வதை மக்கள் கவனித்துத் தான் வருகின்றனர்.

---

### :ப்ளாஷ்பேக்



**சித்தியே சாட்சி!**

1957-இல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், திருச்சி மாவட்டம் - குளித்தலை தொகுதியில் போட்டியிட்டபோது, பொற்செல்வி இளமுருகு தனது கணவருடன் அரும்பாடுபட்டு, கழகப் பணியாற்றி, தேர்தல் வெற்றியையும் சாத்தியப் படுத்தினர். அப்படிப்பட்ட திராவிட இயக்க வீராங்கனை எனக்கு சித்தி முறை. பொற்செல்வி அவர்களை 2012-ஆம் ஆண்டு இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரில் சந்தித்து நலம் விசாரித்துச் சென்றார். அப்படியான சூழலில் இப்படம் எடுக்கப்பட்டது. சில காலம் கழித்து, என் சித்தி அவர்களின் மறைவுக்கு நேரில் வந்து அஞ்சலி செலுத்திச் சென்றார் தலைவர் தளபதி அவர்கள். கழகத்துக்காக உழைத்தவர்களை, என்றைக்கும் கழகம் கைவிடாது என்பதற்கு என் சித்தி அவர்களே சாட்சி.


வி.ராமச்சந்திரன்- டி.கலைச்செல்வி

**-வி.ராமச்சந்திரன்- டி.கலைச்செல்வி, தென்காசி மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---


### கருவூலம்

**முதல் நாடகம்**

**1944 ஆம் ஆண்டு, கலைஞர் தன்னுடைய முதல் நாடகமான ‘சாந்தா [அல்லது] பழனியப்பன்’ நாடகத்தை எழுதினார். திருவாரூர் பேபி டாக்கீஸில் அரங்கேற்றினார். பின்னர் அந்த நாடகம் திராவிடர் கழக மேடைகளில் தொடர்ந்து அரங்கேற்றப்பட்டது.**

---

### திராவிடத்தால் வாழ்கிறோம் 402




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131